லஞ்ச ஊழல் விழிப்புணர்வு ®

# மக்கள் விசாரணை

ஆண்டு-6 இதழ்-10 மார்ச்-2018 மாதஇதழ் விலை ₹ 10/-

makkalvisaranai@facebook twitter




# பெண்களை குறிவைக்கும்

## மக்கள் நீதி மய்யம்


இலவச டோர்
டெலிவரி உண்டு
Jeyam
Green Farm Organic
துவக்க விழாவை
முன்னிட்டு
15%
தள்ளுபடி
எங்களிடம்
இயற்கையான முறையில்
தயார் செய்த எண்ணெய் வகைகள்
மற்றும் இயற்கையான முறையில்
விளைந்த உணவு தானியங்கள்
அனைத்தும் கிடைக்கும்
PRODUCTS
Cereals
Dals
Flours
Millets
Spices
Spice Powders
Culinary Pastes
Masala Mixes
Oils
Teas
Sugar & Jaggery
Jams & Spreads
Honey
Breakfast Cereals
Cookies
Juices
Sparkling Fruit Drinks
Nut & Dry Fruits
Health Foods
Ready to Cook
Snacks
Papad
7/13, பொன்மனச் செம்மல் தெரு,
எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.
செல் : 93821 33334 / 63819 50149

## தலையங்கம்

அன்பாய்
அனைவரும்
ஒன்றிடுவோம்
பண்பால் உயர்ந்து
பயன்பெறுவோம்
தெம்பாய் உலகை
எதிர்கொள்வோம்
துன்பங்கள் யாவையும்
வென்றிடுவோம்
எங்கும் நிறை இறைவனை
போற்றிடுவோம்
இன்பங்கள் யாவையும்
பெற்றிடுவோம்

# தமிழ்நாடு தனியார் மயம் ஆகிறது

தமிழகம் முழுவதும் நடக்கும் கொள்ளை, வழிப்பறி மற்றும் கொலைகளில், கூலிப்படையாக செயல்படும் பெரும்பாலான குற்றவாளிகளின் வயது 23 வயதிற்குள் தான் இருக்கிறது.

இவர்களின் வேலையில்லாத திண்டாட்டத்தை தங்களுக்கு சாதகமாக, பெருங்குற்றவாளிகள் மட்டுமின்றி சாதி, மத அமைப்புகள் பயன்படுத்திக் கொள்கின்றன. வேலையில்லாத சமூக கோபம் இளைஞர்களை, இவர்கள் பக்கம் திசை திருப்புகிறது.

இந்த நிலையில், தமிழக அரசின் பணியிடங்களை தனியாருக்கு விடுவதென்ற ஆபத்தான முடிவை தமிழக அரசு எடுத்துள்ளது. சமீபத்தில் இது தொடர்பாக தமிழக நிதித்துறை கூடுதல் தலைமை செயலாளர் சண்முகம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

தமிழகத்தில் நாளுக்கு நாள் குற்றங்களின் எண்ணிக்கை இரட்டிப்பாகி வருகிறது. இதில் அதிக அளவு இளங்குற்றவாளிகள் ஈடுபடுவதால், கண்டுபிடிக்க முடியவில்லையென போலீசார் கூறுகின்றனர்.

2015ம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய குற்ற அறிக்கையின்படி நாடு முழுவதும் வழிப்பறியில் 1,838 சிறார்கள் ஈடுபட்டுள்ளனர். இதில் 1,385 பேர் 16 வயது முதல் 18 வயதிற்குட்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சமூகத்திற்கு எதிரான இத்தகைய குற்றங்களில் ஈடுபடுபவர்கள் பெரும்பாலானோர் படித்தும் வேலை கிடைக்காத இளைஞர்கள். தமிழகம் முழுவதும் உள்ள வேலை வாய்ப்பகங்களில் வேலைக்காக சுமார் 80 லட்சம் பேர் பதிவு செய்துவிட்டு காத்திருக்கின்றனர். இதில் 18 வயதிற்குட்பட்டவர்கள் 20 லட்சத்து 69 ஆயிரத்து 337 பேர். 18 வயது முதல் 23 வயது வரை உள்ளவர்களின் எண்ணிக்கை 17 லட்சத்து 9 ஆயிரத்து 845 பேர்.


அதில், 'அரசின் வருவாயை பெருக்குவதற்காக பல்வேறு அரசு துறைகளில் உள்ள தேவையற்ற பணியிடங்களைக் குறைக்க, அரசு பணியிடங்களை தனியாருக்கு ஒப்பந்தம் அடிப்படையில் நியமிக்கலாம்' என்ற பரிந்துரையை அரசு பரிசீலித்தது. அதன்படி அரசு ஊழியர் சீரமைப்புக்குழு முன்னாள் முதன்மை செயலாளரான ஆதிசேஷையா தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த குழு தனது அறிக்கையை 6 மாதத்தில் அரசிடம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார். தமிழக அரசு கடுமையான நிதி நெருக்கடியில் தவித்து வருவதால், அரசுப்பணியிடங்களை தனியாருக்கு விட எடுக்கப்பட்ட முடிவென்பது வேலையில்லாத இளைஞர் கூட்டத்தை மேலும் அதிகரிக்கும்.

ஏற்கனவே, தமிழக அரசு பணியிடங்களில் 2.50 லட்சம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. இதனால் ஏராளமான கோப்புகள் பல ஆண்டுகளாக தேங்கிக் கிடக்கின்றன. மக்களும் பல ஆண்டுகளாக அரசு அலுவலகங்களுக்கு நடையாய் நடந்து வருகின்றனர்.

காலியாக உள்ள பணியிடங்களை நிரப்பக்கோரி அரசு ஊழியர் சங்கங்கள் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் நிலையில், அரசுப்பணியிடங்களைதனியாருக்கு விடுவதென்ற முடிவு, இளங்குற்றவாளிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்கவே வழிவகுக்கும். எனவே, இந்த முடிவை தமிழக அரசு உடனே கைவிட வேண்டும்.

- ஆசிரியர்



# காவிரியின் இறுதித் தீர்ப்பு

## சீமான் ஆவேசம்

காவிரிச் சிக்கலுக்கும், இந்திய இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்கிற உச்சநீதி மன்றத்தின் தீர்ப்பு தமிழகத்திற்கு இழைக்கப் பட்ட பெரும் அநீதி; கூட்டாட்சித் தத்துவத் திற்குச் செய்யப்பட்டப் பச்சைத்துரோகம்!

காவிரி நதிநீர் பங்கீடு குறித்த உச்ச நீதி மன்றத்தின் இறுதித்தீர்ப்பு குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' எனும் முதுமொழிக்கேற்ப பின்னிப் பிணைக்கப்பட்டு நீண்ட நெடிய வரலாற்றுத் தொடர்பைக் கொண்டிருக்கிற தமிழகத்திற் கும், காவிரி நதிநீருக்குமான உறவை முறிக்கும் விதமாகக் காவிரி நீரை தமிழகத்திற்குத் தர மறுத்து கர்நாடக அரசும், மத்தியில் ஆளுகிற பாஜக அரசும் வஞ்சித்து வருகிற சூழலில் ஜனநாயகத்தின் கடைசி நம்பிக்கையாக நாம் நம்பி நின்ற உச்ச நீதிமன்றமும் தமிழகத்திற்கு அநீதி இழைத்திருப்பது பெரும் அதிர்ச்சியினை அளிக்கிறது. இத்தீர்ப்பு முடிவு காவிரி நதிநீர் உரிமையினைத் தமிழகத்திடமிருந்து மெல்ல மெல்லப் பறித்து அதனை முழுமையாகக் கர்நாடகாவுக்கு உரியதாக மாற்ற முனைகிற சதிச்செயலோ எனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது.

1991ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத்தீர்ப்பில் தமிழகத்திற்கு ஆண்டுதோறும் 205 டி.எம்.சி. வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டிருந் தது. பிறகு, 2007ஆம் ஆண்டு வெளியிடப் பட்ட இறுதித்தீர்ப்பில் அதில் 12 டி.எம்.சி. குறைத்து ஆண்டுக்கு 192 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற் குத் தரப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்துத் தமிழகம், கர்நாடகம், கேரளா, புதுச்சேரி ஆகிய மாநில அரசுகள் மேல்முறையீடு செய்தன. இதில் தமிழகம் 192 டி.எம்.சி.யுடன் கூடுதலாக 72 டி.எம்.சி. சேர்த்து 264 டி.எம்.சி. வழங்க வேண்டும் எனக் கேட்டிருந்தது. ஆனால் முன்பு வழங்கப்பட்டுள்ள அளவைவிட 14.75 டி.எம்.சி தண்ணீரைக் குறைத்து 177.25 டி.எம்.சி. தண்ணீர் தான்தமிழகத்திற்குத்தரப்படும்என்கிறஇத்தீர்ப்பு

மிகுந்த ஏமாற்றத்தைத் தருகிறது.

இந்தியா எனும் பல்வேறு தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் ஒவ்வொரு இனத்திற்கும் அதற்கென்றே இறையாண்மை உள்ளது. இவ் வினத்திற்குள் நதிநீர் பங்கீடு போன்ற வாழ்வா தாரச் சிக்கல்களில் அனைத்து இனங்களுக்கும் சரியான சமமான நீதியை வழங்குவதில்தான் இந்தியாவின் ஒருமைப் பாடும், இறையாண்மை யும் அடங்கியுள்ளது.

ஆனால் இக்காவிரி நதிநீர் சிக்கலுக்கும், இந்திய இறையாண்மைக்கும், ஒருமைப்பாட் டுக்கும் எந்தத் தொடர்புமில்லை என்று தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பது. திட்ட மிட்டுத் தமிழ கத்திற்கு இழைக்கப்பட்டப் பெரும் அநீதி யாகும். இது இந்தியாவின் கூட்டாட்சி தத்துவத் திற்கு செய்யப்பட்ட பச்சைத் துரோகமாகும்.

1924ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தமிழகத்திற்குரியப் பங்காக 575.68 டி.எம்.சி. தண்ணீர் இருந்திருக்கிறது. 1934லிருந்து 1970 வரை மேட்டூருக்கு வந்த ஆண்டுச் சராசரியின் அளவைக் கணக்கிட்டால் 372.8 டி.எம்.சி.யாக அது இருந்ததாகப் புள்ளி விவரங்கள் கூறுகின் றன. அப்படியிருக்கையில், தமிழகத்திற்குரிய காவிரி நதிநீரின் அளவு குரங்கு அப்பம் பங்கிட்ட கதையாகக் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கப்பட்டு இன்றைக்கு 177.25 டி.எம்.சி. தண்ணீர்தான் சொந்தம் என்று வந்து நிற்பது அப்பட்டமான முறைகேடாகும்.

தமிழகத்தில் நிலத்தடி நீர்வளம் 10 டி.எம்.சி. ஆக இருப்பதால் கர்நாடகாவுக்குக் கூடுதலாக நீரை வழங்குகிறோம் எனும் தீபக் மிஸ்ரா தலை மையிலான நீதிபதிகள் குழுவின் தீர்ப்பு நதிநீர் பங்கீட்டு விதிகளுக்கு எதிராக உள்ளது.

உலக நதிநீர் பங்கீட்டு விதிகளின்படிதான் நதிநீர் உரிமையில் பகிர்வு செய்ய வேண்டுமே ஒழிய, மாநிலத்தின் மழைபெரும் அளவையோ, மாநிலத்தின் நிலத்தடி நீர் மட்டத்தின் அளவையோ வைத்துத் தீர்ப்பு வழங்குவது முறையாகாது. தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் அதிகமாக இருக்கிறது. அதனால், கர்நாடகாவுக்கு அதிகப்படியாக நீரை வழங்குகிறோம் என்கிற வாதம் இதுவரை நடைமுறையில் இல்லாதது.

அதிகப்படியாகத் தண்ணீரை வீணடிக்கும் பெருநகரங்களின் பட்டியலில் முன்னிலையில் இருக்கிறது பெங்களூர் மாநகரம். அங்குப் பயன்படுத்தப்படும் நீரில் பாதிக்குமேற்பட்ட நீர் தேவையன்றி செலவுசெய்யப்பட்டு வீண் செய்யப்படுவதாகப் புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அப்படியிருக்கையில், தமிழகத்தின் விளைச்சல் நிலங்களுக்குக் கேட்ட நீரை எடுத்து பெங்களூருக்குக் கொடுப்பது என்ன நியாயம்?

காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பையோ, இறுதித்தீர்ப்பையோ ஒரு ஆண்டு கூடக் கர்நாடக அரசு செயல்படுத்தியதில்லை. அதன்படி தண்ணீர் வழங்கியதுமில்லை. இன் றைக்கு வழங்கப்பட்டிருக்கிற இத்தீர்ப்பின்படி ஆண்டுதோறும் 177.25 டி.எம்.சி. தண்ணீர் தமிழகத்திற்கு வழங்கும் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் இல்லை. இந்தத் தீர்ப்பையும் செயல்படுத்த மறுத்து கர்நாடகா அரசு நிச்சயமாக முரண்டுபிடிக்கும்.


காவிரி ஒரு மாநிலத்திற்கு மட்டும் சொந்த மல்ல எனத் தீர்ப்பளித்துவிட்டு, ஒரு மாநிலத்தின் நலன்களை மட்டுமே கருத்தில்கொண்டு தீர்ப்பு வழங்கி இருப்பது பெரும் முரணாகும். விதிகளை மீறி நிர்ணயிக்கப்பட்ட பாசனப்பரப்பை 11 இலட்சம் ஏக்கர் பரப்பிலிருந்து 14 இலட்சம் ஏக்கர் வரை விரிவுப்படுத்தி, காவிரி நதிநீர் தங்களுக்கு மட்டுமே சொந்தம் என்பது போலக் கொட்டம் அடித்து வரும் கர்நாடக அரசைக் கண்டிக்காது அவர்களுக்கு ஆதரவாய் தீர்ப்பு வழங்கியிருப்பது வருந்தத்தக்கது.

**ஒட்டுமொத்தமாக உச்ச நீதிமன்றம் வழங்கி யிருக்கும் இத்தீர்ப்பு பெருத்த ஏமாற்றத்தை அளிக்கிறது. காவிரி நதிநீர் உரிமையைத் தமிழர்களிடமிருந்து பறிக்கும் பச்சைத் துரோகமாகும். தமிழக அரசு விரைந்து செயலாற்றி இவ்வழக்கில் மேல்முறையீடு செய்யத்தக்க வழிகள் இருக்கிறதா எனச் சட்ட வல்லுனர் களைக் கொண்டு ஆராய்ந்து காவிரி நதிநீர் உரிமையை மீட்க வேண்டும் என நாம் தமிழர் கட்சி சார்பாகத் தமிழக அரசை வலியுறுத் துகிறேன்.**

**- பாலாஜி**



# பெண்களை குறிவைக்கும் மக்கள் நீதி மய்யம்



**அரசியலில் குதிப்பதற்கு முன் ரஜினியுடன் ரகசிய உடன்பாடு செய்து கொண்டதாக நடிகர் கமல்ஹாசன் கூறினார்.**

இதுபற்றி நடிகர் கமல்ஹாசன் கூறியிருப்ப தாவது:

ஆசான்களைப் பார்ப்பதற்கு முன்பே, நண்பர் ரஜினியை சந்தித்து விட்டேன். அப்போது, சென்னை புறநகரில் காலா படப் பிடிப்பில் அவர் இருந்தார். ‘சந்திக்கலாமா, அதுவும் ரகசியமாக’ என்று கேட்டேன். ‘எங்கு வரலாம்’ என்று பேசி விட்டு, தனியாக காருக்குள் அமர்ந்து பேசினோம். நான் எடுத்த அரசியல் பிரவேச முடிவு, மற்றவர்களுக்குத் தெரியும் முன் அவருக்குத் தெரிய வேண்டும் என்பதற்காகவே அந்தச் சந்திப்பு. ‘அப்படியா, எப்ப முடிவெடுத்தீங்க?’ என்று ஆச்சரியமாகக் கேட்டார். ‘மனதளவில் முடிவெடுத்து ரொம்ப நாள் ஆச்சு. ஆனால், காலெடுத்து வைப்பது இப்போதுதான்’ என்றேன்.

‘எந்தக் காரணம் கொண்டும் கண்ணியம் குறையக் கூடாது’ என்பதுதான் அன்று நாங்கள் பேசிக் கொண்டதில் முக்கியமான விஷயம். ஆம், ‘ஒருவேளை எதிரும் புதிருமாக நின்றாலும் மரியாதை குறைந்து விடக்கூடாது. அந்தப் போர் தர்மம் நமக்கு வேண்டும்’ என்றேன். ‘அஃப்கோர்ஸ் கமல்’ என்றார் அவர். அதுவே எங்களின் ரகசிய உடன்பாடு.

முடிவெடுத்திருப்பதைச் சொல்ல அன்று சந்தித்தேன் என்றால், ‘கட்சி கட்டப் புறப்படு கிறேன்’ என்று சொல்ல இப்போது சந்தித் தேன். ‘வரலாமா’ என்று கேட்டேன். ‘சாப்பிட் டிட்டிருக்கேன். முடிச்சிடுறேன் வாங்க’ என்றார். ஆனால், நான் போகும்போது சாப்பிட்டுக் கொண்டுதானிருந்தார். ஆம், அவ்வளவு சீக்கிரம் போய்விட்டேன். அதே புரிதலோடுதான் இருக்கிறோம். பேசுகிறோம் என்பதற்காக இதைச் சொல்கிறேன். நாங்கள்

நினைத்திருந்தால் வாடாபோடா நண்பர்களாகவே இருந்திருப்போம். 'நாங்கள் அப்படி இல்லை' என்று 25 வயது இளைஞர்களாக இருக்கும்போதே முடிவு செய்து விட்டோம்.இவ்வாறு கமல் கூறினார்.

**நாளை நமதே சுற்றுப்பயணம் தள்ளிவைப்பு**

அப்துல் கலாம் வீட்டிலிருந்து தனது அரசியல் பிரவேசத்தை துவக்கிய கமல்ஹாசன், மதுரையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தனது கட்சியின் பெயர் மக்கள் நீதி மய்யம் என்பதை அறிவித்தார். கட்சி கொடியையும் அறிமுகம் செய்தார். மதுரை பொதுக் கூட்டம் முடிந்ததும் முதல்கட்டமாக திண்டுக்கல், சிவகங்கை மாவட்டங்களுக்கு அவர் செல்வதாக இருந்தார். ஆனால், இப்போது திடீரென இந்த பயணத்தை அவர் ஒத்தி வைத்துள்ளார்.

இதுகுறித்து, கமல் தரப்பில் கேட்டபோது, 'முதலில் தென் மாவட்டங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு மக்களை சந்திப்பது மட்டுமே திட்ட மாக இருந்தது. ஆனால், இப்போது தென் மாவட்டங் களில் உள்ள கிராமங்கள் தோறும் செல்ல கமல் திட்ட மிட்டுள்ளார். இதற்கான ஏற்பாடுகளை முறையாக செய்த பின்னர், 15 நாட்கள் கழித்து நாளை நமதே பயணத்தை தொடங்க கமல் திட்டமிட்டுள்ளார். ஒரு பக்கம் 18, 21 வயது பெண் வாக்காளர்களை கவர நிர்வாகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

**அமைச்சர்களின் பேச்சு கமல் கருத்து**

மதுரையில் நேற்று பேட்டியளித்த கமல், ''அடுத்த மாதத்திலிருந்து கிராமங்களை தத்தெடுத்து, மேம்படுத் தும் பணிகளை செய்ய இருக்கிறோம். கட்சிக்கொடியின் சின்னத்தில் சிவப்பு நிறம் உழைப்பையும், வெள்ளை நிறம் நேர்மையையும், கருப்பு நிறம் திராவிடத்தை யும் குறிக்கிறது. ஆறு முனை நட்சத்திரங்கள் 6 தென்னிந்திய மாநிலங் களையும், அந்த மாநில மக்களையும் குறிக்கிறது'' என்றார்.

மதுரை விமானநிலையத்தில் கமல் நிருபர்களிடம் கூறும்போது,

''மதுரையில் நடந்த கட்சிக்கூட்டத்தில் முன் வரிசையில் இருந்தவர்கள் ரசிகர்கள். பின் வரிசையில் அமர்ந்திருந்தது மக்கள் கூட்டமே. இதைத்தான் நாங்கள் எதிர்பார்த் தோம். முதலில் நாங்கள் ஊழலை தவிர்ப் போம். அதிமுக அமைச்சர்களின் பேச்சில் நல்ல கருத்து இருந்தால் ஏற்போம். இல்லா விட்டால் விட்டு விடுவோம்,'' என்றார். **- ஆசிரியர்**


வாழ்க தமிழ்! வளர்க தமிழகம்!!

MAKKAL VISARANAI

**மக்கள் விசாரணை**

மக்களின் மனக்குமுறல்

**லஞ்ச ஊழல் விழிப்புணர்வு**

ஆண்டு-6 மார்ச்-2018 இதழ்-10

ஸ்ரீ திருமலை பப்ளிகேஷன் சார்பாக வெளியிடுபவர் ஆசிரியர்

முனைவர் **ஆ. மவுரியன்,** B.A.,Dip. Journalism,

• ஆசிரியர் குழு

முனைவர் **காசி. அரங்கநாதன், A. காதர் மொய்தீன், V. அருணாச்சலம், A.C. குமார்**

• நிர்வாக ஆசிரியர்

**வீ. சிவசங்கரன்,** B.B.A.,

• துணை ஆசிரியர்கள்

**ஆர்.ஆர். சண்முகவேல், கே. ரமேஷ்குமார், எஸ். சரவணன், பி. மாரிமுத்து, D. ரவி, M. தரணி, வீரஆறுமுகம், கே.பாலாஜி, அ.மு.ரமணாத்திரி**

• முதன்மை செய்தியாளர்கள்

**S. ராம்குமார்** சேலம் **M. சத்தியராஜ்,** நாமக்கல்.
**A. பாலகிருஷ்ணன், செந்தில்குமார்,** கோவை,
**R. ஜெயா, K. ஷமீம் ஷகிலா, P. சாந்தா,** தென்சென்னை
**யு. அக்ரம்கான், சுக்கூர்கான்,** கிருஷ்ணகிரி.
**பா. சுப்பிரமணியன்,** திருநெல்வேலி. **நாகராஜ்,** மூணாறு.
**மாரிமுத்து,** உளுந்தூர்பேட்டை, **சுசீ ஈஸ்வர்,** தென்காசி.
**ராமசுப்பிரமணியன்,** ராஜபாளையம். **சிலம்பரசன்,** தர்மபுரி,
**வெங்கடேசன்** தி.மலை **S. ரமேஷ், அ. சிவராமன்,** காஞ்சிபுரம்.

• நிருபர்கள்

**எம். நிவேதிதா, இர்வின், கனகதுர்கா, வ. சங்கர், ஞானவேல், அகிலாண்டேஸ்வரி, குருதேவ், சச்சின், ஏழுமலை, பிரவின், சத்தியநாராயணமூர்த்தி, சதீஷ்குமார், A.D. ராஜேந்திரன்**

• சட்ட ஆலோசகர்கள்

**M. குணசீலன், B.Com.,M.L.,**
**M. சுதாகர்,** B.Sc.,B.L.,
(உயர்நீதிமன்றம், சென்னை.)

• புகைப்பட நிருபர்கள் :

**M. சந்தோஷ்சிவன், K. மணிவண்ணன்**

• இதழ் வடிவமைப்பு : **AKS Creative's**

அலுவலகம் :

**மக்கள் விசாரணை**

நெ.21/12, 2-வது சந்து, நடராஜ் பில்டிங் முதல் மாடி, ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001.

Email : writermouriyan@gmail.com

news@makkalvisaranai.com / www. makkalvisaranai.com

**Cell : 93821 33334 / 63819 50149**



**Press & Registration of Book Act-in** ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

**தமிழ்நாடு மற்றும் கர்நாடகம் ஆகிய இரண்டு மாநிலங்களும் இந்தியா - பாகிஸ்தான் போலமோதிக்கொள்ளும் ஒரு விஷயம் என்றால் அது காவிரி நதிநீர்விஷயம்தான்.இந்த காவிரி பிரச்சனையை வைத்து தான் இரு மாநில அரசியல்வாதிகளுமே அரசியல் செய்து கொண்டிருக்கிறார்கள்.**

இந்த பிரச்சனையானது தீர்த்து வைக்கப் பட்டுவிட்டால் அரசியல்வாதிகளுக்கு வேலையே இருக்காது என்று கூறுகின்றனர் சமூக ஆர்வலர்கள். ஆனால் இன்று வரை கர்நாடகாவிடம் தண்ணீருக்காக கையேந்திக் கொண்டிருக்கிறோம்.

அவர்களும் கெத்தாக முடியாவே முடியாது என்று மார்தட்டி கொண்டிருக்கிறார்கள். ஆனால் கர்நாடகாவுக்கே நாம்தான் தண்ணீர் தந்து கொண்டிருக்கிறோம் தெரியுமா? நமது தமிழ்நாட்டின் ஊட்டியில் மோயார்என்றொரு ஆறு பாய்ந்துகொண்டிருக்கிறது. இந்த மோயார் ஆற்றின் ஒரு பகுதி பவானிசாகர் அணைக்கும், மற்றொரு பகுதி கர்நாடகாவிலும் பாய்கிறது.

கர்நாடகாவில் பாயும் தண்ணீர் கபினி அணையிலும், நூகு அணையிலும் கலக்கிறது. பின்னர் இரண்டும் இணைந்து டி.நரசிபுரா என்ற இடத்தில் காவிரியில் கலக்கிறது. அதன் பிறகு ஒகேனக்கல் வழியாக தமிழகத்திற்குள் பாய்கிறது. ஆனால்நாம் கொடுக்கும் தண்ணீரை நமக்கே கொடுக்காமல் கர்நாடகம் நம்மை வஞ்சித்து கொண்டுள்ளது.

ஆனால் நாம் ஊட்டியில் இருந்து தண்ணீர் செல்லும் வழித்தடத்தை மறித்து அணையை கட்டினாலே போதும். கர்நாடகாவிடம் கையேந்தும் நிலை வராது. தமிழக விவசாயி களின் எதிர்பார்ப்பு இதுதான். இதுபோலவே தமிழகம் முழுக்க உள்ள நீர்வளங்களை பாது காத்தாலே தமிழகம் செழிக்கும் என்பதில் மாற்று கருத்து இல்லை.தேர்தலில் ஓட்டிற்கு பணம் வாங்குவதற்கு பதில் தயவுசெய்து இதை கேளுங்கள் என்று சமூக ஆர்வலர்களால் தற்போது மக்களிடமிக் விழிப்புணர்வை ஏற்படுத்திவருகின்றனர்.

**ஊட்டியில் அணை கட்டுவது எவ்வாறு சாத்தியம் : பூலோக அமைப்பின்படி விவரிக்கிறார் வனத்துறை அதிகாரி..!!**

ஊட்டியில் அணை கட்டினால் போதும் கர்நாடகா நம்மிடம் கையேந்தும் தண்ணீருக் காக.! இவ்வாறு சிலநாட்களாக முகநூலிலும், வாட்ஸ் அப்பில் செய்திகள் பரப்பப்பட்டு வருகிறது.

ஆனால் இது முற்றிலும் வதந்தி என்றும் இது பூலோக அமைப்புக்கு பொருந்தாத செய்தி என்றும் ஓய்வுபெற்ற நீலகிரி மாவட்ட வனத் துறை அதிகாரி திரு. பத்ரிசாமி கூறியுள்ளார்.

# ஊட்டியில் அணை கட்டுவது சாத்தியமா?



மறுப்பு: மோயாற்று நீர் முழுவதும் தமிழ் நாட்டுக்கு தான் வருகிறது. சத்தியமங்கலம் கோட்டத்தில் தாளவாடி, ஹாசனூர் பகுதியில் சில ஓடைகள் கர்னாடகா செல்கின்றன.

அந்த ஓடைகளுக்கு குறுக்கே கர்நாடகாவில் சொர்ணவதி, சிக்கஹொலே ஆகிய இரு அணைகள் கட்டியுள்ளனர். இந்த நீர் காவேரி செல்ல வேண்டிய நீர். இந்த இரு அணைகளுக்கு செல்லும் நீரைவேண்டுமானால் தடுத்து மலையை குடைந்து இந்த பக்கம் கொண்டு வந்து மோயாற்றிலும் பவானியிலும்கலக்கலாம்.

கூடலூரில் உருவாகி மேற்கு நோக்கி சில ஓடைகளும் கிழக்கு நோக்கி சில ஓடைகளும் ஓடுகின்றன.கிழக்கு நோக்கி ஓடுபவை மோயா றாக உருவாகுகின்றன. மேலும் சிங்காரா பவர் அவுஸ் நீரும்மோயாற்றில் கலக்கின்றன. இது முழுவதும் தமிழ்நாட்டில் ஓடி பவானி சாகர் அணையில் கலக்கிறது.

மேற்குப்பக்கம் ஓடும் ஓடைகள் கேரளா சென்று விடுகின்றன. இதைத்தான் தடுக்க பாண்டியாறு பொன்னம்புழா திட்டம் தீட்டப் பட்டு கிடப்பில் போடப்பட்டது.

தமிழ்நாட்டின் பூலோக அமைப்பை கூட தெரியாமல் ஆளாளுக்கு தவறான ஒரு விஷயத்தை நம்புகிறமாதிரி உருவாக்கி அதை பரப்புவது.. ஒண்ணும் சொல்லிக்கிற மாதிரி இல்லை என தனது முகநூல் பக்கத்தில் பதிவு செய்துள்ளார்.

ஊட்டியின் மோயாற்றின் ஒரு பகுதி பவானிசாகர் அணைக்கும், அதன் வடக்குப் பகுதி கர்நாடக எல்லையிலும் பாய்கிறது. கர்நாடகாவில் பாயும் நீரானது கபினி மற்றும் நுகு அணைகளைச் சென்றடைகிறது. பின்னர் இரு அணையிலிருந்தும் வெளியேறும் நீரானது ஒன்றாக இணைந்து, டி.நரசிபுரா என்ற இடத்தில் காவிரியுடன் இணைந்து, மீண்டும் தமிழகத்திற்குள் நுழைகிறது. அதன்பிறகு ஒகேனக்கல் வழியாகத் தமிழகத்திற்குள் பாய்கிறது."

கடந்த சில நாட்களாகத் தமிழக உழவர் களுக்கு உதவும் வகையில் சிந்தித்த சிலர் வெளி யிட்டுள்ள தகவல் இது. இவ்வாறு கர்நாடகாவில் பாயும் மோயாற்றின் வழியாக கர்நாடகா பலன் அடைவதாகவும், இதனால் அவர்களுக்கே நாம் தான் நீர் தருகிறோம் என்றும், அதை அவர்கள் தமிழகத்திற்குத் தரமறுக்கிறார்கள் என்றும், நாம் கொடுக்கும் தண்ணீரை நமக்கே கொடுக் காமல் கர்நாடகம் நம்மை வஞ்சித்துக் கொண் டுள்ளது என்றும், மோயாற்றின் மீது நாம் ஓர் அணையைக் கட்டிவிட்டோம் என்றால் கர்நாடகா நீருக்காக நம்மைக் கெஞ்சும் நிலை உருவாகிவிடும் என்றும், இந்த உண்மை தெரிந் தும் அரசியல்வாதிகள் தங்கள் தன்னலத்தின் காரணமாக இத்தீர்வை எடுக்கும் முயற்சியை மேற்கொள்வதில்லை என்றும் பலமான கருத் துப் பரப்புரை சமூக வலைத்தளங்களிலும் மாறி மாறிப் பகிர்ந்து கொள்ளப்படுகிறது.

இணையத்தின் சில "செய்தித் தளங்களும்" கூட இவர்களுக்கு எந்த விதத்திலும் சளைத்தவர்களாகத் தெரியவில்லை. ஆனால் இது உண்மையா, இதனால் தீர்வு கிடைக்குமா என்று ஒருவரும் அக்கறை இன்றி வரும் செய்திக்கு கருத்துப் பகிர்வதும் தொடர்கிறது என்பதுதான் வியப்புக்குரியது. இத்தகைய போக்கிற்கு நன்கு கற்றவர்களும் விதிவிலக்கல்ல.

நீலகிரியின் வடக்குப் பகுதியில் துவங்கி காடுகளின் வழியேமட்டும் பாயும் மோயாற்றின் நீளம் 100 கிமீ.க்கும் குறைவானது. இதில் சுமார் 25 கிமீ. கர்நாடகா எல்லைக்குள் பாய்கிறது. முதுமலைக் காட்டின் வழியாகப் பாயும் இந்த மோயாறுதான் அப்பகுதியின் வனவிலங்குகளின் வாழ்வாதாரம். மோயாற்றுக்குக் கிளையாறுகள் எதுவும் கிடையாது. இவ்வாறு நீலகிரியின் வடபகுதியில் பாயும் மோயாறும், நீலகிரியின் தென்பகுதியில் கோயம்புத்தூர் மாவட்டத்தின் மேட்டுப்பாளையம், சிறுமுகை வழியே பாயும் பவானி ஆறும் பவானிசாகர் நீர்த்தேக்கத்தைத் தங்கள் நீரால் நிரப்புகின்றன. இதற்காக சத்திய மங்கலம் வட்டத்தில் உள்ள கொத்தமங்கலம் என்ற கிராமத்திற்கு அருகில் பவானி திட்டம் மூலம் பவானிசாகர் அணையும் கட்டப்பட்டு 33 கோடி கன அடி வரை தண்ணீர் தேக்கப் படுகிறது.

மோயாற்றின் பள்ளத்தாக்கில், மோயாற்றின் வடகரை சத்தியமங்கலம், தலைமலை, தாளவாடி பகுதிகளை உள்ளடக்கிய காட்டுப் பகுதியும்; தென்கரை கொடநாட்டுப் பகுதியும் வெவ்வேறு விலங்குகளின் இருப்பிடங்களாகத்

திகழ்கின்றன. சோலைக் காடுகளைக் கொண்ட குளிர் பிரதேசமான கொடநாட்டுப் பகுதியில் வாழும் கருமந்தி, இருவாச்சிப் பறவைகள், பழுப்பு மரநாய், ஈ பிடிப்பான் பறவை ஆகியன, மோயாற்றின் வடக்கில் புதர் காடுகளைக் கொண்ட வெப்பப் பிரதேசமான சத்தியமங்கலம் பகுதியில் கிடையாது. இதுவே இப்பகுதி இயற்கைச் சூழலின் தனிச்சிறப்பு ஆகும்.

இருகரையின் காட்டு விலங்குகளும் மோயாற்றினை நம்பியே வாழ்கின்றன. யானைகள், புலிகள், கழுதைப் புலி, வெளிமான் ஆகிய நான்கு விலங்குகளும் வாழும் உலகின் ஒரே இடம் மோயாற்றின் பள்ளத்தாக்கு. இது மேற்குத் தொடர்ச்சி மலையும் கிழக்குத் தொடர்ச்சி மலையும் இணையும் காட்டுப் பகுதிகளில் ஒன்று.

மோயாற்றின் கிளையாறு வழியாக கபினி ஆற்றிற்கு நீர் கிடைக்கிறதா என்பதில் கோவை, ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் வாழும் மக்களுக்கே சரியான புரிதல் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இணையம் மற்றும் சமூக வலைத் தளங்களின் மூலம் செய்தி கிடைக்கும் பொழுது அது உண்மைதானா என ஆராய்ந்து பார்க்க அதே இணையமும் நமக்குப் பல வழிகளில் உதவுகிறது. கூகுள் இணையத் தேடலும், கூகுள் புவிவரைபடமும் ஒரு சொடுக்கில் கணினித் திரையில் தரவுகளை அள்ளித்தருகிறது.

கூகுள் புவிவரைபடத்தில் மோயாற்றின் பாயும் தடத்தைத் தொடர்ந்து சென்றால் மோயாற்றுக்குக் கிளையாறு இல்லை என்பதும், இல்லாத ஒரு கிளையாற்றின் வழியாக கபினி யாறும் நீர் பெறவில்லை என்பதும், மோயாற்றில் அணைகட்டுவதால் கர்நாடகாவை நாம் அடி பணிய வைக்கமுடியாது என்பதும் தெளிவாகிறது. கொடுக்கப்பட்டுள்ள படங்கள் வழி உண்மை அறியலாம்.

**காமராஜரைப்போல் விவசாயப் பிரச்சனைக்கு தமிழகத்தில் ஓடும் ஒட்டுமொத்த ஆறுகளையும் இணைத்தால் ஓரளவு விவசாய நீர் பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும். மழை நீர் சேமிப்பதன் அவசியத்திற்குப் போதுமான விழிப்புணர்வு இல்லாததே இந்த தொடர் பிரச்சனைக்கு காரணமாக இருக்கிறது.**

**- மவுரியன்**


**விளம்பரக் கட்டணம்**

| | |
|---|---|
| முழு பக்கம் கலர் பின் பக்கம் அட்டை | ரூ. 20,000 /- |
| முழு பக்கம் கலர் பின் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| முழு பக்கம் கலர் முன் பக்கம் உள் அட்டை | ரூ. 15,000 /- |
| அரை பக்கம் கலர் | ரூ. 8,000 /- |
| முழு பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 9,000 /- |
| அரை பக்கம் கருப்பு வெள்ளை | ரூ. 5,000 /- |

**மக்கள் விசாரணை**

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர்,
சென்னை - 600 078. **Email : news@makkalvisaranai.com**
**Cell : 93821 33334, 93821 44446**

# சேவைக்கு மரியாதையில்லை தமிழகத்தில் பணமே பிரதானம்



## உயர் நீதிமன்ற நீதிபதிகள் வேதனை

தமிழக மருத்துவக் கல்வி இயக்குநராக டாக்டர் எட்வின்ஜோ நியமிக்கப்பட்டதை எதிர்த்து கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் ரேவதி கயிலைராஜன் உயர் நீதிமன்ற கிளையில் வழக்கு தொடர்ந்தார். இதை விசாரித்த உயர் நீதிமன்றம், எட்வின்ஜோ நியமனத்தை ரத்து செய்து, தகுதி அடிப்படையில் மருத்துவக் கல்வி இயக்குநரை நியமிக்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டது. இதையடுத்து அப்பொறுப்பில் இருந்து எட்வின்ஜோ நீக்கப்பட்டார்.

இந்நிலையில் மருத்துவக் கல்வி இயக்குநராக தன்னை நியமிப்பது தொடர்பான உத்தரவை ஆறு வாரங்களில் அமல்படுத்தாததால் சுகாதாரத் துறை செயலர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக் கோரி ரேவதி உயர் நீதிமன்ற கிளையில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு நீதிபதிகள் என்.கிருபாகரன், ஆர்.தாரணி அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. கூடுதல் அட்வகேட் ஜெனரல் புகழேந்தி வாதிடுகையில், அடுத்த மருத்துவக் கல்வி இயக்குநராக எட்வின் ஜோவை நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றார். அதற்கு நீதிபதிகள், எந்த அடிப்படையில் எட்வின்ஜோ மருத்துவக் கல்வி இயக்குநராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்? எனக் கேள்வி எழுப்பினர். அதற்கு எட்வின்ஜோ, ரேவதி கயிலைராஜன் ஒப்பீட்டு அறிக்கையை கூடுதல் அட்வகேட் ஜெனரல் தாக்கல் செய்தார்.

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டீன் மீனாட்சிசுந்தரம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர், மருத்துவக் கல்வி இயக்குநர் பதவிக்கான பணி மூப்பு பட்டியலில் மீனாட்சி சுந்தரத்தின் பெயரும் இடம்பெற்றிருந்தது. இதனால் அவரை மருத்துவக் கல்வி இயக்குநராக நியமிக்க வேண்டும் என்றார். அதற்கு ஆட்சேபம் தெரிவித்த கூடுதல் அட்வகேட் ஜெனரல், மருத்துவ உபகரணங்கள் வாங்கியதில் முறைகேடு நடைபெற்றது தொடர்பாக மீனாட்சிசுந்தரத்துக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. இதனால் அவரை மருத்துவக் கல்வி இயக்குநர் பதவிக்கு பரிசீலிக்கவில்லை என்றார்.

அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், பணி மூப்பு பட்டியலில் இருந்த ஒருவருக்கு குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியது எப்படி? அப்பட்டியலில் இருந்து அவரது பெயரை நீக்கும் நோக்கத்தில் குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் சேவைக்கு மரியாதையே இல்லை. அனைத்துக்கும் பணம் தான் பிரதானமாக உள்ளது. சேவை புரிந்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்காவிட்டாலும் பரவாயில்லை. அவர்கள் மீது குற்றச்சாட்டுகளை தெரிவித்து களங்கப்படுத்தாமல் இருந்தால் போதும். தங்களுக்கு வேண்டியவர்களுக்கு பதவி உயர்வு வழங்க எந்த நிலைக்கும் செல்லத் தயங்கமாட்டார்கள் என வேதனையை வெளிப்படுத்தினர்.

**- கே.ரமேஷ்குமார்**



# காற்றில் கரைந்த கண்ணழகி

பெரிய அளவில் கவனிக்கப் படாத 'மனிதரில் இத்தனை நிறங்களா?' படத்தில் தன் மீது விழுந்த கறையைத் தாங்கிக்கொண்டு எதிர்நீச்சல் போடும் பாத்திரம். அந்த வைராக்கியம் படம் முழுவதும் உறுதியுடன் வெளிப்படும். தன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் நாயகனிடமிருந்து விலகிச் செல்ல நினைத்தாலும் மனம் கேட்காது. அந்த உணர்வை மிக நுட்பமாக வெளிப்படுத்துவார். 'மழை தருமோ என் மேகம்?' பாடலில் அவர் காட்டும் தவிப்பைக் கவனித்திருக்கிறீர்களா?கழிவிரக்கமும் காதலும் வைராக்கியமும் ஒன்றுடன் ஒன்று மோத, கண்கள் மூலம் அந்தக் கலவையை வெளிப்படுத்தும் அழகு, இயக்குநர் சொல்லித்தருவதையும் தாண்டி வெளிப்படும் கலைத்திறன் அல்லவா!

கவுரி ஷிண்டே இயக்கிய 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' திரைப்படம் வெளியான சமயம். டெல்லி பிவிஆர் திரையரங்கின் வெளியே நல்ல கூட்டம். வந்திருந்தவர்களில் கணிசமானோர் 15 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் நடிக்க வந்திருந்த ஸ்ரீதேவியைத் திரையில் காணும் ஆர்வத்தில் வந்திருந்தவர்கள் என்பதை அவர்களுடைய பேச்சு சொன்னது. வரிசையில் நின்றிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண், 'மிஸ்டர் இந்தியா' படத்தின் 'ஐ லவ் யூ' பாடலில் ஸ்ரீதேவியின் நடனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நீலச் சேலை முழுவதும் தென்றலில் நெகிழ்ந்தாட, காதல் சொட்ட அவர் ஆடும் நடனம் அது. 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' படத்திலும் ஒரு காட்சியில் ஸ்ரீதேவி யின் மகன் அவரை மைக்கேல் ஜாக்ஸன் நடனம் ஆடச் சொல்வான். அப்போது மிக எளிதாக அதேசமயம் ஒரு அமெச்சூர்போல அந்த நடனத்தை ஆடுவார் ஸ்ரீதேவி. அவர் ஆடாத நடனமா!

மிகச் சிறிய வயதில் நடிக்க வந்தவர். 'நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே' (நம் நாடு) என்று எம்ஜிஆர் பாடும்போது மழலைச் சிரிப்புடன் தலையாட்டும் பையனாக வருவார். 'துணைவன்' (1969) படத்தில் 'முருகக் கடவுள். சிவாஜியின் 'பாபு' படத்தில் அம்மு என்று குழந்தை நட்சத்திர மாகத் தொடர்ந்து நடித்துவந்தவர், தனது பதின்பருவத்தின் தொடக்கத்திலேயே நாயகியாகிவிட்டார். ஆம், பாலசந்தரின் 'மூன்று முடிச்சு' படத்தில் ரஜினி, கமலுடன் போட்டி போட்டு நடித்தபோது, அவருக்கு வயது வெறும் 13. எத்தனை சவால்களைக் கடந்து இந்தியத் திரையுலகின் உச்ச நட்சத்திரமாக வளர்ந்திருப்பார் என்பதை நினைத்துப் பார்த்தால், அவரது

வெற்றியின் பிரம்மாண்டம் புரியும்.

நடிப்பில் அவருக்கு எதுவுமே சவால் இல்லை என்றே சொல்லலாம். எதையும் அநாயாசமாகச் செய்துவிடுவார். 'ஜானி' அர்ச்சனா பாத்திரம் ஒன்று மட்டுமே ஒரு நடிகையின் வாழ்நாளுக்குப் போதுமானது. ரஜினியிடம் தன் காதலை வெளிப்படுத்தி சங்கடப்படும் காட்சியில் அவர் காட்டியிருக்கும் நுட்பம் பிறவிக் கலைஞருக் கானது.

திரைக் கலைஞர்கள் எல்லா விதமான பாத்திரங்களிலும் நடிக் கத்தான் செய்கிறார்கள். ஆனால், எந்தப் பாத்திரத்திலும் ஒன்றி நடிக்க முடியும், பரிமளிக்க முடியும் என்று நிரூபித்தவர்கள் சிலரே. மடிசார் முதல் மாடர்ன் உடை வரை எந்த வகையான உடையும் பொருந்தும் கச்சிதமான உடலமைப்பையும் அவர் பெற்றிருந்தார்.

நடித்த அத்தனைப் பாத்திரங் களிலும் தோற்றம், உடல்மொழி, உச்சரிப்பு என்று எல்லா வகையிலும் பொருந்திப் போனவர் ஸ்ரீதேவி. 'மூன்றாம் பிறை'யில் குழந்தைமை வெளிப்படும் காட்சிகளில் அத்தனை வெகுளி யாக இருக்கும் ஸ்ரீதேவி, கமலைக் கதற வைத்து விட்டு ரயிலில் புறப்படும்போது எப்படி மாறியிருப்பார்? வெறுமனே ஒப்பனை மாற்றத் தில் செய்து காட்டக் கூடிய விஷயமா அது! 'மீண்டும் கோகிலா'வில் "விஷமம் பண்ணாதேள்" என்று கமலைக் கண்டித்துக்கொண்டே வெட்கப் படுவார். அந்தப்படத்தின் 'சின்னஞ்சிறு வயதில்' பாடலில், குழந்தை சிறுநீர் கழித்துவிட அவஸ் தையில் நெளியும் கமலை ஓரக்கண்ணால் பார்த்தபடி குறும்புடன் பாடும் ஸ்ரீதேவி வெறும் நடிகை மட்டும்தானா?

ஸ்ரீதேவியைப் பற்றிக் குறிப்பிடும்போது வைஜெயந்திமாலா, ஹேமமாலினிபோல் தமிழ கத்திலிருந்து பாலிவுட் சென்று வெற்றி பெற்றவர் என்பார்கள். உண்மையில், தமிழ்ப் படங்கள், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென் னக மொழிப் படங்களில் நடித்துப் பெரும் புகழ்பெற்ற பின்னர், 1980-களின் தொடக்கத்தில் பாலிவுட் சென்று மிகப் பெரிய வெற்றிகளைக் கண்டவர் என்பது ஸ்ரீதேவியின் தனிச்சிறப்பு. 1980-களின் தொடக்கத்தில் அவர் நடித்த இந்திப் படங்கள் மிகப் பெரிய வெற்றி பெற இந்தியாவின் முதல் பெண் சூப்பர் ஸ்டாரா னார். ராஜேஷ் கன்னா, தர்மேந்திரா, மிதுன் சக்கர வர்த்தி, அமிதாப் பச்சன், ரிஷிகபூர், அனில் கபூர், சல்மான் கான், சஞ்சய் தத் என்று பாலிவுட்டில் அவர் ஜோடி சேராத பெரும் நாயகன்கள் இல்லை. மிக நீண்ட காலம் பாலிவுட்டை



அவர் கட்டியாண்டார்.

ரஜினியுடன் நடித்த 'நான் அடிமை இல்லை' படம்தான் தமிழில் கதாநாயகியாக அவர் நடித்த கடைசிப் படம். அதன் பிறகு, தொடர்ந்து இந்திப் படங்களில்தான் கவனம் செலுத்தினார். 'இங்கிலீஷ் விங்கிலீஷ்', 'புலி' போன்ற படங்கள் மூலம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழ்த் திரையில் தோன்றினாலும் அவர் பெயர் சொல்லத்தக்க ஒரு படம் மீண்டும் வரவில்லை என்ற வருத்தம் தமிழ் மக்களிடம் தொடர்ந்து இருந்தது. இதோ, அவரது மறைவுச் செய்தி கேட்டுத் தமிழகமே அதிர்ந்து நிற்கிறது.

சிரஞ்சீவியுடன் அவர் நடித்த 'ஜகதேக வீருடு அதிலோக சுந்தரி' படத்தில் பூவுலகில் தனது மோதிரத்தைத் தொலைத்துவிட்டு, அதைத் தேடித் திரியும் தேவ கன்னிகையாக நடித்திருப்பார். தேவதைக்கு மோதிரம் கிடைத் திருக்க வேண்டும். நம்மை விட்டு மறைந்து விட்டார்!

**- சந்தோஷ்சிவன்**


மக்கள் சந்திப்பு புரட்சி பயணம்
இதயதெய்வம் புரட்சிதலைவி
டாக்டர் அம்மாவின் வழிதோன்றல்
தியாகத்தலைவி
சின்னம்மா அவர்களின் ஆணைக்கிணங்க
05.03.2018 திங்கட் கிழமை அன்று
செஞ்சி தொகுதிக்கு வருகை தரும்
மக்கள் செல்வர்
TTV தினகரன் B.Tech.,MLA.,
அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்
Ra.பாலசுந்தரம் B.Sc.,
விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர்
செஞ்சி அ.கௌதம் சாகர் B.E.,M.A.,
செஞ்சி ஒன்றிய கழக செயலாளர்
வழக்கறிஞர் சின்னையா வீரப்பன்
B.A.B.L.,Ex.MC.,
செஞ்சி நகர கழக செயலாளர்,
செஞ்சி வழக்கறிஞர் சங்க செயலாளர்
பில்டர்.கணேஷ்
நகர இளைஞரணி செயலாளர்
வீடியோ M.சரவணன்
நகர இலக்கிய அணி செயலாளர்




# இலங்கையில் தமிழ் மக்களுக்காக புதிய அரசு தொலைக்காட்சி தொடக்கம்

இலங்கை அரசின் சார்பில் நல்லிணக்க தொலைக்காட்சி என்ற பெயரில் புதிய தமிழ் தொலைக்காட்சி தொடங்கப் பட்டுள்ளது.

இலங்கையில் முதன்முதலாக ஐ.டி.என். என்ற தனியார் தொலைக்காட்சி 1979-ல் ஒளி பரப்பை தொடங்கியது. இதை அந்த ஆண்டி லேயே இலங்கை அரசு கையகப்படுத்தியது. தொடர்ந்து 1982-ல் தொடங்கப்பட்ட இலங்கை தேசியத் தொலைக்காட்சியான ரூபவாஹினி தமிழகத்தின் தென் மாவட்டங் களிலும் துல்லியமாக தெரிந்ததால், தமிழகத் திலும் இதற்கு கணிசமான பார்வையாளர்கள் இருந்தனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டு ஸ்தாபனத் தில் 2000-ம் ஆண்டில் 2-வது அலைவரிசையாக ஆரம்பிக்கப்பட்ட 'ஐ' தொலைக்காட்சியில் பெருமளவிலான நேரம் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன. இதனால் இலங்கையில் வட, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களுக்காக தொலைக் காட்சி யின் தேவையை அந்நாட்டு அரசு உணர்ந்தது. இதைத் தொடர்ந்து, நல்லிணக்க தொலைக் காட்சி (Reconciliation Channel) என்ற பெய ரில் புதிய தொலைக்காட்சியை உருவாக்க அமைச்சரவையின் ஒப்புதல் பெறப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வந்தன. கடந்த 20-ம் தேதி இலங்கை அரசின் சார்பாக ரூபவாஹினி கூட்டு ஸ்தாபன தலை மையகத்தில் நல்லிணக்க தொலைக்காட்சியை அதிபர் சிறிசேன தொடங்கி வைத்தார்.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் தேசிய, சமய மற்றும் பண்பாட்டு அடையா ளங்களை உறுதிப்படுத்தும் வகையிலான முழுநேர ஒளிபரப்புகள் இந்த அலைவரிசையில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது 25-க்கும் மேற்பட்ட தொலைக் காட்சிகள் இலங்கையில் ஒளிபரப்பாகி வருகின்றன.

இவற்றில் பிரத்யேகமாக 24 மணி நேர தமிழ் தொலைக்காட்சிகள் இயக்கப்பட் டாலும் கூட தமிழகத்தில் உள்ள தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையே பார்ப்ப தற்கு இலங்கை தமிழர்கள் அதிகம் ஆர்வம் காட்டுவது குறிப்பிடத்தக்கது.

**- அகிலாண்டேஸ்வரி**

# தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம் நடத்திய
# 9-வது இலவச கண் சிகிச்சை முகாம்




















தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கம் மற்றும் எழும்பூர் அரசு கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் சென்னை ஜி.ஏ.ரோடு. பழைய வண்ணாரப்பேட்டையில் 18-02-2018 அன்று காலை 9 மணிக்கு தொடங்கி மாலை வரை நடைபெற்றது. தமிழ் பத்திரிகை எழுத்தாளர் சங்கத்தின் மாநில கௌரவத் தலைவர் **R.R.**சண்முகவேல் தலைமை ஏற்க, இந்த முகாமை துவக்கி வைத்த அமைச்சர் டி.ஜெயகுமார், தமிழ் பத்திரிகை எழுத்தாளர்கள் சங்கத்தின் மருத்துவ சேவைகளை பாராட்டி பேசினார். சிறப்பு விருந்தினராக சென்னை பத்திரிகை பதிவு அலுவலகத்தின் முன்னாள் துணை பத்திரிகை பதிவாளர் மற்றும் தூர்தர்ஷன் இணை இயக்குனர் திரு.**I.**விஜயன் அவர்கள். மாநில தலைவர் முனைவர் காசி.அரங்கநாதன், மாநில பொதுச் செயலாளர் முனைவர் ஆ.மவுரியன் மற்றும் மாநில பொருளாளர் அ.காதர் மொய்தீன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்த முகாமில் அரசு கண் மருத்துவமனை முன் வந்து இத்தகைய மருத்துவ பரிசோதனையை நேரடியாக வந்து மக்களுக்கு சிகிச்சை அளிப்பதால் இந்த வாய்ப்பை பொதுமக்கள் 300-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர். மேலும் இம்முகாமில் 27 பேர் இலவச கண் அறுவைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அன்று நடைபெற்ற மருத்துவ முகாமில் இலவச கண் சிகிச்சை மட்டுமல்லாமல் அக்குப்பஞ்சர் மருத்துவர்களும் வந்து இலவசமாக சிகிச்சை வழங்கினார்கள். இந்த முகாமில் அறுவை சிகிச்சிக்கு கண்டறியப்பட்டுள்ள 27 பேர் சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவமனை செலவிலேயே அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த முகாமிற்கு மாநில கௌரவ செயலாளர் **K.**ரமேஷ்குமார், மாநில துணைத் தலைவர் **V.**அருணாசலம், ராம சுப்பிரமணியன், **K.**பாலாஜி மற்றும் மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ரவி, சங்கர் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.

# சிந்தனை முத்துக்கள்





**உன் பையன் எப்படி கட்டைவிரல் சப்புற பழக்கத்தை விட்டான்?**

பெரிய விஷயம் இல்ல... இடுப்புல நிக்காத தொள தொள ஜட்டி போட்டு விட்டேன்.... அப்பப்ப ஜட்டி நழுவாம இருக்க இரண்டு கையாலையும் பிடிச்சு பிடிச்சு கட்டைவிரல் பழக்கத்தை மறந்துட்டான்.

**இப்படியே விலைவாசி, வேலையின்மை, ஏழ்மை, ஏற்றத்தாழ்வு எல்லாம் மக்கள் மறக்கணும்னா..?**


ஆண்டாள், அயோத்தி, பசுவதை, பத்மாவதி, பாகிஸ்தான், தலாக், என்று மாற்றி மாற்றி தொள தொள ஜட்டியா மக்களுக்கு மாட்டி விட்டா... மக்கள் அனைத்தையும் மறந்து ஜட்டியப் பிடிச்சுக் கிட்டு அலைவாங்க. இதைத்தான் அரசியல் வாதிங்க செய்யுறாங்க.












## சொந்தம் என்று ஏதடா?

பெற்றோர் வைத்த
பெயரும்கூட "பிணம்"
என்று மாறுது!

விரும்பி அணிந்த
துணியும் மணியும்
"கந்தல்"என்று ஆகுது!

நீ, பாடுபட்டு சேர்த்த
சொத்தும் "வாரிசு"
இடம் சேருது!

கூடி வாழ்ந்த
மனைவி பிள்ளை
"கூடவே"வா சாகுது?

ஓடி,ஆடி உழைத்த உடம்பு
"உயிரை"விட்டு கிடக்குது!

உயிர் கொடுப்பேன்
என்றதெல்லாம்
ஊமையாக நிற்குது!

நீ! சொந்தம் என்று
சொல்வதெல்லாம்
உனக்கு சொந்தம் இல்லை!

நீ வந்த உலகில், அவன்
தந்த உடம்பில், தங்கி
செல்லும் வழிப்போக்கனே!







மக்கள் சந்திப்பு புரட்சி பயணம்
இதயதெய்வம் புரட்சிதலைவி
டாக்டர் அம்மா வின் வழிதோன்றல்
தியாகத்தலைவி
சின்னம்மா அவர்களின் ஆணைக்கிணங்க
05.03.2018 திங்கட் கிழமை அன்று
செஞ்சி தொகுதிக்கு வருகை தரும்
மக்கள் செல்வர்
TTV தினகரன் B.Tech.,MLA.,
அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்
Ra.பாலசுந்தரம் B.Sc.,
விழுப்புரம் மாவட்ட கழக செயலாளர்
செஞ்சி அ.கௌதம் சாகர் B.E.,M.A.,
செஞ்சி ஒன்றிய கழக செயலாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்டம்

# நாட்டை விட்டு ஓடும் பலே கொள்ளையர்கள்!







விஜய் மல்லையா, லலித் மோடி, நீரவ் மோடி எல்லோரும் எப்படி நாட்டை விட்டு சென்றார்கள் என்ற குழப்பம் ஏற்பட்டு இருக்கிறது. இதில் முதல் இருவர் குற்றவாளிகள் என்று தெரிந்த பின் தப்பிய வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நீரவ் மோடி மீது சிறிய அளவில் குற்றச்சாட்டுகள் எழுந்த போதே அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார். இவர்களை மீண்டும் நாட்டிற்குள் கொண்டு வர இந்தியா படாதபாடுபட்டுக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் அவர்கள் எப்படி நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள் என்று திடுக்கிடும் தகவல் வெளியாகி இருக்கிறது.

விஜய் மல்லையா, லலித் மோடி இருவரும் நாட்டை விட்டு வெளியேறியது தான் மிகவும் அதிசயமான ஒன்றாகும். விஜய் மல்லையா, லலித் மோடி இரண்டு பேரும் இங்கு வழக்குகளை சந்தித்துக் கொண்டு இருந்த போது வெளியேறி இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சென்ற தகவலே சில நாட்கள் கழித்துதான் இந்தியாவிற்கு தெரிந்துள்ளது.

இவர்களின் முதல் விருப்பம் சுவிட்சர்லாந்தாக இருக்கிறது. அதன்பின் இங்கிலாந்து செல்கிறார்கள். அப்படியும் இல்லையென்றால் அமெரிக்க செல்கின்றனர். நீரவ் மோடி அமெரிக்கா வில் இருக்கிறார். 1993 மும்பை குண்டு வெடிப்புக்கு காரணமான அபு சலீம் போர்சுகல் ஓடிப்போனது குறிப்பிடத்தக்கது.

இந்த தகவல்கள் அனைத்தும் பாது காப்பு குறித்த கேள்வியை எழுப்பி இருக்கிறது. இவர்கள் கண்காணிக்கப்பட்டுக் கொண்டு இருக்கும் போது, எப்படி ஏர்போர்ட் அதிகாரிகள், வெளியுறவுத் துறை, பாதுகாப்பு துறை இவர்களை கோட்டைவிட்டது என்ற கேள்வி எழும்பி இருக்கிறது. அதுவும் தீவிரவாதிகள் கூட வெளியேறி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் இவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய பின்தான் இந்திய அரசு இவர்களை தேட உத்வேகம் எடுக்கிறது. அதன்பின்தான் இவர்களின் வங்கி கணக்கு கள் முடக்கப்படுகிறது. பாஸ்போர்ட் முடக்கம் நடக்கிறது. ஆனால் குற்றச்சாட்டு எழும் போதே இவர்களின் பாஸ்போர்ட்கள் முடக்கப்படுவதில்லை. இதனால் இவர்கள் எளிதாக தப்பித்து சென்று இருக்கிறார்கள்.

– சரவணன்



# இனி அரசு வேலை கோவிந்தா

அரசுத் துறைகளில் உள்ள தேவையற்ற பணியிடங்களைக் கண்டறிய ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி எஸ்.ஆதிசேஷய்யா தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது தமிழக அரசு. எந்தெந்தப் பணிகளைத் தனியாரிடம் ஒப்படைக்கலாம் என்றும் இந்தக் குழு பரிந்துரை செய்யவுள்ளது. அரசுத் துறைகளில் பல்லாயிரக் கணக்கான காலிப் பணியிடங்கள் நீண்ட காலமாக நிரப்பப்படாமல் இருக்கும் நிலையில், அரசின் இந்த முடிவு அதிர்ச்சியளிக்கிறது.

எந்தவொரு அரசு அலுவலகத்துக்குச் சென்றாலும், அங்கு போதுமான எண்ணிக்கையில் பணியாளர்கள் இல்லை. ஓய்வுபெற்றவர்கள், பணியிட மாற்றம் பெற்றவர்களின் இடங்கள் உடனடியாக நிரப்பப்படுவதில்லை. தலைமைச் செயலகம் முதற்கொண்டு வட்டாட்சியர் அலுவலகங்கள் வரை காலிப் பணியிடங்கள் ஆண்டுதோறும் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன.

இன்னொரு பக்கம், அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் ஆண்டுதோறும் அதிகரித்தபடியிருக்கிறது. மாவட்டத் துணை ஆட்சியர் பணிகளுக்கான குரூப் 1 பணிகள் தொடங்கி, அலுவலக உதவியாளர்களுக்கான குரூப் 4 பணிகள் வரை அனைத்துப் பணி களுக்கும் லட்சக்கணக்கான மாணவர்கள் விண்ணப்பிக்கிறார்கள்.

சில அரசு அலுவலகங்களில் கூடுதல் பணியிடங்கள் இருக்கின்றன என்பதையும், மிகச் சில அலுவலகங்களில் வேலையே நடப்பதில்லை என்பதையும் மறுப்பதற்கில்லை. அவற்றைக் கண்டறிந்து, தேங்கிக் கிடக்கும் பணிகளை முடுக்கிவிட வேண்டுமேயொழிய, அவற்றைத் தனியாரிடம் ஒப்படைத்துவிட முடிவெடுப்பது தவறானது. அரசுப் பணிகளில் உடனடியாகச் செயல்பட வேண்டியவை, நீண்ட கால நோக்கில் நன்மை பயப்பவை என்று அதன் நோக்கங்கள் வேறுபடுகின்றன.

ஒரு வட்டாட்சியர் அலுவலகத்தின் பணிகளும், மாவட்ட அருங்காட்சியகத்தின் பணிகளும் வெவ்வேறானவை. ஆனால், இரண்டையுமே அரசு தான் பொறுப்பேற்று நடத்த வேண்டும். எந்தெந்தப் பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியாரிடம் ஒப்படைக்கலாம் என்று முடிவெடுக்கும்போது, இந்தக் காரணங்கள் கருத்தில்கொள்ளப்பட வேண்டும்.

இந்தக் குழுவை நியமித்துள்ள தமிழக அரசின் நோக்கம், செலவுகளைக் குறைக்க வேண்டும் என்பதுதான். அதில் கொஞ்சம் உண்மையிருக்கிறது. ஆனால், பணியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்தால் செலவுகளைக் குறைத்துவிடலாம் என்று வெறுமனே வரவு - செலவுப் பிரச்சினையாக மட்டும் இந்தப் பிரச்சினையை அணுகக் கூடாது.

2001 முதல் 2005 வரையில் அதிமுக ஆட்சியில் தமிழகத்தில் பணி நியமனத் தடைச் சட்டம் அமலில் இருந்தது. அப்போது போட்டித் தேர்வுகள் நடத்தப்படாததால், ஆயிரக் கணக்கான இளைஞர்கள் அரசுப் பணிகளுக்கான வாய்ப்பை இழந்தார்கள். மீண்டும் தேர்வுகள் நடத்தப்பட்டபோது, வயது வரம்புகள் தளர்த்தப்பட்டபோதும்கூடத் தகுதியான மாணவர்கள் பலரும் அந்த வாய்ப்பைப் பெற முடியாமல் போனது.

மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் சமீபத்தில் அறிவித்துள்ள ஆட்சிப் பணித் துறைக்கான தேர்விலும் பணியிடங்கள் குறைக்கப்பட்டுள்ளன. மத்திய அரசுப் பணிகளுக்குப் போட்டியிடும் மாணவர் களுக்கு, அது கிடைக்காமல் போகும்பட்சத்தில், தமிழக அரசுப் பணியாவது கிடைத்துவந்தது. இப்போது அதற்கும் முட்டுக்கட்டை போடும் செயலைத் தமிழக அரசே செய்வது நியாயமாகாது!



# 12 மடங்கு லாபத்தில் மருந்துகள் விற்பனை

## கட்டுப்பாட்டு ஆணையம்

## ஓர் பகீர் ரிப்போர்ட்

*தனியார் மருத்துவமனைகளில் மருந்துகள் 12 மடங்கு லாபத்தில் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. முக்கிய நோய்களுக்கு பயன்படும் மருந்துகள், அதிகமாக பயன்படுத்தப்படும் பொது நோய்களுக்கான மருந்துகள் பல உயிர்காக்கும் அத்தியாவசிய மருந்து பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.*

*இவற்றுக்கு தேசிய மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையம் விலை நிர்ணயித்து வருகிறது. இதுவரை நூற்றுக்கணக்கான மருந்துகள், மருத்துவ கருவிகள் பல இந்த பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. இவ்வாறு அத்தியாவசிய பட்டியலில் சேர்க்கப்பட்டு விலை கட்டுப்படுத்தப்பட்ட மருந்துகளை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் விலை உயர்த்தக்கூடாது. கொள்ளை லாபத்துக்கு விற்கக்கூடாது என்ற விதிமுறைகள் உள்ளன.*

*ஆனால், சில மருத்துவமனைகள் இதை மீறி செயல்படுவதாகவும், நோயாளிகளிடம் கொள்ளை வசூல் நடப்பதாகவும் புகார்கள் வந்தன. இதை தொடர்ந்து மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையம் ஆய்வு நடத்தியதில் டெல்லி என்சிஆர் பகுதியில் உள்ள சில மருத்துவமனைகளில் 12 மடங்கு வரை லாபத்துக்கு மருந்துகள் விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. மருந்துகளில் பல மருத்துவர் பரிந்துரையின்பேரில் வழங்கக்கூடியவை.*

*ஆனால் மருத்துவனைகளுக்கு வரும் நோயாளிகளின் மருத்துவ பில்களில் மருத்துவர் பரிந்துரையின்றி விற்கக்கூடிய மருந்துகள் கால்வாசிக்கு மேல் இடம்பெற்றுள்ளன. இது பில் தொகையில் 4 சதவீதமாக உள்ளது.*

*இதுபோல் மருத்துவ சிகிச்சைக்கு முந்தைய மற்றும் பிந்தைய பரிசோதனைகள் சார்ந்த செலவு பில் தொகையில் 15 சதவீதமாக உள்ளது.*

*சில தனியார் பரிசோதனை மையங்களில் வசூலிக்கப்படும் கட்டணங்களை விட மருத்துவமனைகளில் உள்ள பரிசோதனைக் கூடங்களில் அதிகம் வசூல் செய்யப்படுகிறது. இதனால் இந்த மருத்துவமனைகளுக்கு மிக அதிக லாபம் கிடைக்கிறது.*

*பல மருந்துகள் அதிகபட்ச சில்லரை விலைக்கு மேல் பில்லில் குறிப்பிடப்பட்டுள்ளன. மருத்துவர் பரிந்துரையின்பேரில் வழங்கக்கூடிய மருந்துகள், சம்பந்தப்பட்ட*

*மருத்துவமனைகளின் கொள்முதல் விலையை விட 116 சதவீதத்தில் இருந்து 357 சதவீதம் வரையிலும் பொது பட்டியலில் உள்ள மருந்துகள் 158 சதவீதத்தில் இருந்து 1,192 சதவீதம் வரையிலும் லாபத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.*

*பட்டியலிடப்படாத மருந்துகள்தான் மருத்துவமனைகள் லாபத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவேதான் மருத்துவர்கள் இவற்றை பரிநதுரை செய்துள்ளனர். மருந்து நிறுவனங்கள் லாபத்தையும் சேர்த்துதான் அதிகபட்ச சில்லரை விலையை அச்சிடுகின்றன.*

*ஆனால் மருத்துவ கருவிகள் சிலவற்றுக்கு 350 சதவீதம் முதல் 1700 சதவீதம் வரை லாபம் வைத்து செயற்கை விலையேற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். மருந்துவிலை கட்டுப்பாட்டில் இல்லாத மருந்துகளுக்கு 160 சதவீதம் முதல் 225 சதவீதம் வரையிலும், கட்டுப்பாட்டு பட்டியலில் உள்ளவற்றுக்கு 115 சதவீதம் முதல் 200 சதவீதம் வரையிலும் விலை உயர்த்திவிற்பனை செய்துள்ளனர். என மருந்து விலை கட்டுப்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.*

*டெல்லி மருத்துவமனையில் மட்டுமின்றி நாடு முழுவதும் உள்ள பல மருத்துவமனைகளில் இத்தகைய மோசடிகள் நடந்து வருவதாக புகார்கள் வந்துள்ளன.*

*எனவே மருந்து விலை கட்டுப்பாட்டு உத்தரவை நீட்டித்து பொதுமக்கள் பாதிக்கப்படாத வகையில் மாற்றங்கள் செய்ய வேண்டிய உள்ளது என்று ஆணைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.*

**வீ. அருணாசலம்**


# நிருபர்கள் தேவை

**பத்திரிகைத் துறையில் சாதிக்கத் துடிக்கும்
துடிப்பான, உண்மையை வெளிக்கொணர
சேவை மனப்பான்மையுடன்
பணியாற்ற மாவட்ட வாரியாக**

**ஆண்/பெண் நிருபர்கள் தேவை**

தொடர்புக்கு

**மக்கள் விசாரணை ✷ அருணை முரசு**

**Cell : 93821 33334 / 63819 50149**

**Email : writermouriyan@gmail.com**




# நல்லதை அறுவடை செய்வோம்

ஒருநாள் மகான் புத்தர் பிச்சையேற்க ஒரு வீட்டின் முன் போய் நின்றார். அவரைக் கண்ட விவசாயியான அந்த வீட்டுக்காரன் கோபத்துடன், உடல் வலிமை யோடு இருக்கிற நீர் ஏன் உழைக்கக் கூடாது?

நான் வயலில் உழுகிறேன்; விதைக் கிறேன்; கடுமையாக உழைத்து எனக்குத் தேவையான உணவைப் பெறுகிறேன்.

என்னைப் போல நீயும் உழைத்தால் இப்படிப் பிச்சையெடுக்கும் இழிநிலை வேண்டாமே!

என்னைப் போல கொளவரத்துடன் உண்ணலாமே? என்று கேட்டான்.

அதற்கு புத்தர் பெருமான், நானும் உழுது விதைத்துத்தான் உண்கிறேன் என்றார்.

அந்த விவசாயி வியப்புடன், நீர் உழவரா? அதற்கான அடையாளம் உம்மிடம் கொஞ் சம்கூட இல்லையே!

கலப்பை எங்கே? காளைகள் எங்கே? விதைகள் எங்கே? என்று கேட்டான்.

உடனே புத்தர், அன்பனே! கவனமாகக் கேள்.

நம்பிக்கை என்னும் விதையை விதைக்கிறேன்.

என் நல்ல செயல்களை அந்த விதைக்கு மழைநீராகப் பாய்ச்சுகிறேன். விவேகமும் வைராக்கியமும் என் கலப்பையின் உறுப்புக்கள்.

என் உள்ளமே மாடுகளை வழிநடத்தும் கடிவாளம். தருமமே கலப்பையின் கைப் பிடி. தியானமே முள்.

மன அமைதியும் புலனடக்கமுமே எருதுகள்.

நான் மனமென்னும் வயலை உழுது, ஐயம், மயக்கம், அச்சம், பிறப்பு, இறப்பு ஆகிய களைகளை எடுத்து எறிகிறேன்.

அறுவடை செய்து கிடைக்கும் கனி - நிர்வாணம் என்னும் பிறப்பு இறப்பு இல்லாத நிலையாகும்.

இப்படி நான் அறுவடை செய்வதால் எல்லாத் துன்பங்களும் அழிந்துவிடுகின்றன என்று விளக்கம் தந்தார்..

ஆம்..,நண்பர்களே..,


ஒரே முறை வாழப்போகிறோம், எதை விதைக்கிறோமோ அதைத்தான் பலநூறு மடங்காக அறுவடை செய்யப் போகிறோம்....

நல்ல செயல்களை, எண்ணங்களை விதைப்போம்

அளவில்லா மகிழ்ச்சியோடு அறுவடை செய்வோம்..

**பிறரை வாழ வைத்து வாழ்வோம்..**


# நமது உடல் ஒரு கடிகாரம்



ஒவ்வொரு உறுப்புக்கும் அதன் பணியை செய்து முடிக்க இரண்டு மணி நேரம் ஒதுக்கியுள்ளது. இரண்டு மணி நேரம் முடிந்ததும் மீண்டும் அலாரத்தை அடுத்த உறுப்புக்கு மாற்றி விடுகிறது.

விடியற்காலை 3.00 மணிமுதல் 5.00 மணிவரை நுரையீரலின் நேரம், இந்த நேரத்தில் சுவாசப் பயிற்சி செய்து காற்றின் மூலம் வரும் பிராண சக்தியை உடலுக்குள் அதிகமாகச் சேகரித்தால் ஆயுள் நீடிக்கும். தியானம் செய்யவும் ஏற்ற நேரம் இது. ஆஸ்துமா நோயாளிகள் இந்த நேரத்தில் மிகவும் சிரமப்படுவார்கள்.

விடியற்காலை 5.00 மணிமுதல் 7.00 மணிவரை பெருங்குடலின் நேரம். காலைக் கடன்களை இந்த நேரத்துக்குள் முடித்தே தீர வேண்டும் மலச்சிக்கல் உள்ளவர்கள் இந்த நேரத்தில் எழுந்து கழிவறைக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் நாளடைவில் மலச்சிக்கல் தீரும்.உயிரணுக்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ள நேரமும் கூட இதுவே.



காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை வயிற்றின் நேரம். இந்த நேரத்தில் கல்லைத் தின்றாலும் வயிறு அரைத்து விடும். காலை உணவை பேரரசன் போல் உண்ண வேண்டும் என்று சொல்வார்கள். இந்த நேரத்தில் சாப்பிடுவதுதான் நன்கு செரிமானமாகி உடலில் ஒட்டும்.

காலை 9.00 மணிமுதல் 11.00 மணி வரை மண்ணீரலின் நேரம். காலையில் உண்ட உணவை மண்ணீரல் செரித்து ஊட்டச் சத்தாகவும் ரத்தமாகவும் மாற்றுகிற நேரம் இது. இந்த நேரத்தில் பச்சைத் தண்ணீர் கூடக் குடிக்கக் கூடாது. மண்ணீரலின் செரிமான சக்தி பாதிக்கப்படும். நீரழிவு நோயாளிகளுக்கு மோசமான நேரம் இது.

முற்பகல் 11.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணி வரை இதயத்தின் நேரம். இந்தநேரத்தில் அதிகமாகப் பேசுதல், அதிகமாகக் கோபப் படுதல், அதிகமாகப் படபடத்தல் கூடாது. இதயம் பாதிக்கப்படும். இதய நோயாளிகள் மிகமிக எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நேரம்.

பிற்பகல் 1.00 மணிமுதல் 3.00 மணி வரை சிறு குடலின் நேரம். இந்த நேரத்தில் மிதமாக மதிய உணவை உட்கொண்டு சற்றே ஓய்வெடுப்பது நல்லது.

பிற்பகல் 3.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை சிறுநீர்ப்பையின் நேரம். நீர்க் கழிவுகளை வெளியேற்ற சிறந்த நேரம்.

மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை சிறுநீரகங்களின் நேரம். பகல் நேர பரபரப் பிலிருந்து விடுபட்டு அமைதி பெற, எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்க, தியானம்செய்ய, வழிபாடுகள் செய்ய சிறந்த நேரம்.

இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை, பெரிகார்டியத்தின் நேரம். பெரிகார்டியம் என்பது இதயத்தைச் சுற்றி இருக்கும் ஒரு ஜவ்வு இதயத்தின் Shock absorber இரவு உணவுக்கு உகந்த நேரம் இது.

இரவு 9.00 மணி முதல் 11.00 மணி வரை, டிரிப்பிள் கீட்டர் என்பது ஒரு உறுப்பல்ல. உச்சந்தலை முதல் அடி வயிறு வரை உள்ள மூன்று பகுதிகளை இணைக்கும் பாதை. இந்த நேரத்தில் உறங்கச் செல்வது நல்லது.

இரவு 11.00 மணி முதல் 1.00 மணி வரை பித்தப்பை இயங்கும் நேரம். இந்த நேரத்தில் தூங்காது விழித்திருந்தால் பித்தப்பை இயக்க குறைபாடு ஏற்படும்.

இரவு 1.00 மணி முதல் விடியற்காலை 3.00 மணி வரை கல்லீரலின் நேரம். இந்தநேரத்தில் நீங்கள் உட்காந்திருக்கவோ விழித்திருக்கவோ கூடாது. கட்டாயம் படுத்திருக்க வேண்டும். உடல் முழுவதும் ஓடும் ரத்தத்தை கல்லீரல் தன்னிடத்தே வரவழைத்து சுத்திகரிக்கும் நேரம் இது. இந்த பணியை நீங்கள் பாதித்தால் மறுநாள் முழுவதும் சுறுசுறுப்பில்லாமல் அவதிப்படுவீர்கள்.

**– சங்கர்**


# மக்கள் விசாரணை (மாதஇதழ்)

**சந்தாதாரர் ஆக வேண்டுமா?**

கீழ்கண்ட சந்தா படிவத்தை பூர்த்தி செய்து, தேவையான சந்தாவை குறிப்பிட்டுக் கிழே உள்ள விலாசத்துக்கு அனுப்பவும்.

**சந்தா படிவம்**

பெயர் : ....................

முழு முகவரி : ....................

....................

தொலைபேசி எண். : ....................

| | | |
|---|---|---|
| ஓர் ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 110/- | ☐ |
| மூன்று ஆண்டு சந்தா (தமிழ்நாடு) | ரூ. 360/- | ☐ |
| ஓர் ஆண்டு சந்தா (வெளிநாடு) | ரூ. 1000/- | ☐ |

**MAKKAL VISARANAI, Current A/C. 149202000000953, IFSC Code IOBA0001492, Indian Overseas Bank, K.K. Nagar Branch** என்ற வங்கி கணக்கிற்கு பணம் செலுத்தி ரசீதை ஜெராக்ஸ் அனுப்பினால் போதுமானது.

மேலும் விபரங்களுக்கு

**மக்கள் விசாரணை** (மாத இதழ்)

எண். 7/13, பொன்மனச் செம்மல் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை - 600 078.

**Email : news@makkalvisaranai.com Cell : 93821 33334 / 63819 50149**



முனைவர் ஆ.மவுரியன்



வீரத் தமிழச்சிகளின் வரலாறு..!

5

# உலகின் முதல் தற்கொலைப் போராளி தமிழச்சி "குயிலி"

ஒடுக்கப்பட்ட சமூகமான சக்கிலியர் குலத்தில் பிறந்த குயிலிக்கு ஆதரவாக வேலுநாச்சியார் செயல்பட்டால் நம் சாதி கவுரவம் என்ன ஆவது? தாழ்த்தப்பட்டவர்கள் நம்மை எள்ளி நகையாட மாட்டார்களா? என குயிலியின் செயலுக்கு நியாயம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

இதையெல்லாம் கேள்விப்பட்டு வேலுநாச்சியார் தம் படைவீரர்களுக்குப் பகிரங்கமாக அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். "எதிரிகள் சிவகங்கை மண்ணிலிருந்து விருப்பாச்சியிலுள்ள நம்இருப்பிடத்திற்கு வந்துதூங்கிக்கொண்டிருந்த என் அறையில் கத்தி வீசியிருக்கிறார்கள். இது என்னைக் கொல்வதற்கா? அல்லது குயிலியைக் கொல்வதற்கா? என்பது ஒரு பக்கம் இருக்கட்டும். ஆனால் இத்தனைத் துணிச்சலாக என் அறைக்கு அவர்கள் எப்படி வந்தார்கள்? என்பதுதான் என் கேள்வி.

நம் படை வீரர்களின் ஆதரவு இல்லாமல் அவர்களுக்கு இந்தத் துணிச்சல் வந்திருக்காது. சிவகங்கையில் நம் எதிரிகள் கடைசியாக என்னை வீழ்த்துவதற்காக எடுத்துள்ள சாதி என்னும் ஆயுதம் நம் வீரர்களையும் பாதித் திருப்பதாகவே நான் கருதுகிறேன். என்னுடைய அத்தனை விதமான சலுகைகளையும் சன்மானங் களையும் பெற்றுக் கொண்ட சிலம்பு வாத்தியார் எனக்குத் துரோகம் செய்தார். ஆனால் எந்தவிதமான சலுகையினையும் கிஞ்சித்தும் பெறாத குயிலி என் உயிரைக் காப்பாற்றியிருக்கிறாள்.

"சிலம்பு வாத்தியார் என் சொந்த சாதிக் காரராக இருந்தாலும் அவர் எனக்கு துரோக மல்லவா இழைத்தார்? ஆனால் குயிலி சக்கிலியர் குலத்தில் பிறந்திருந்தாலும் நம் நாட்டிற்கு துரோகமிழைத்தவர்களைக் கண்டறிந்து களையெடுத்திருக்கிறாளே?

உங்களுக்குச் சாதிதான் முக்கியம் என்றால் நீங்கள் இந்த நிமிடமே என்னுடைய படையி லிருந்து விலகிக் கொள்ளலாம். சாதிவெறி பிடித்தவர்கள் எனக்குத் தேவையில்லை."

வேலுநாச்சியாரின் இந்த அறிவிப்பு கடுமை யாக இருந்தாலும்கூட அது நியாயமாகப்பட்ட தால் அனைவரும் ஏற்றுக்கொண்டனர். ஆனால் குயிலி வேலுநாச்சியாரின் நெஞ்சில் பன்மடங்கு உயர்ந்தார்.

8 ஆண்டுகளுக்குப் போருக்குத் தேவையான தளவாடங்கள் வந்து சேர்ந்தன. பன்னிரண்டு பீரங்கி வண்டிகள், நூற்றுக் கணக்கான துப்பாக்கி கள் திப்பு சுல்தானால் வேலு நாச்சியாரிடம் ஒப்படைக்கப்பட்டன.

1780-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 5-ம் நாள் விருப்பாச்சி பாளையத்திலிருந்து பலரின் எதிப்பு களைத் தகர்த்து சிவகங்கையை நோக்கி வேலு நாச்சியாரின் படை புறப்பட்டது. உடையாள் பெண்கள் படைக்குத் தலைமையேற்று குயிலி கம்பீரமாக வந்தாள். முதலாவதாக வேலு நாச்சியாரின் படையை மதுரை கோச்சடை

யில் எதிர்த்து நின்றான் மல்லாரி ராயன். ஒரு மணிநேரப் போரிலேயே மல்லாரி ராயன் குத்திக் கொலை செய்யப்பட்டான். வேலு நாச்சியாரின் படைகள் வீறு நடைபோட்டன. அடுத்து திருபுவனத்தில் மல்லாரிராயனின் தம்பி ரங்கராயன் பெரும்படையோடு எதிர்த்து நின்றான். மருது சகோதரர்கள் அவனைத் தவிடு பொடியாக்கினர்.

அடுத்து வெள்ளைக்கார அதிகாரிகள் மார்டின்ஸ், பிரைட்டன் மற்றும் நவாபின் படைத் தளபதி பூரிகான் தலைமையில் மானாமதுரையில் மாபெரும் படை எதிர்த்து நின்றது. வேலு நாச்சியாரின் பீரங்கிப்படை அதனை அடித்துத் துவம்சம் செய்தது. அன்று மானாமதுரை வைகை ஆற்றில் தண்ணீருக்குப் பதிலாக இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது.

முத்துவடுகநாதரின் படுகொலையில் பெரும்பங்கு வகித்த ஆங்கிலத் தளபதி ஜோசப் சுமித் காளையார் கோவிலில் வேலுநாச்சியாரின் படையை எதிர்கொண்டான். அங்கும் வேலு நாச்சியார் படை வெற்றிக்கொடி நாட்டியது.

ஆங்கிலப் படைகள் புறமுதுகிட்டு ஓடின. எதிர்த்த மல்லாரிராயனையும், வேலுநாச்சியாரின் படைகள் சிவகங்கைச் சீமையில் வெற்றி முழக்கத்துடன் நுழைந்தன. ஆனால் அங்குதான் யாரும் எதிர்பாராத ஆபத்து காத்துக் கொண்டிருந்தது.

தனது நயவஞ்சகத்தால் மறைந்திருந்து வேலு நாச்சியாரின் கணவரது உயிரைப் பறித்த கொடுங்கோலன் ஆங்கிலத் தளபதி பாஞ் சோர் காளையார் கோவிலிலிருந்து சிவகங்கை அரண்மனை வரையிலும் அடிக்கு ஒரு போர் வீரனை நிறுத்தியிருந்தான். அனைவரது கைகளும் துப்பாக்கி ஏந்தியிருந்தன. பீரங்கிகளும் அரண்மனையைச் சுற்றி நிறுத்தப்பட்டிருந்தன.

ஆயிரக் கணக்கான துப்பாக்கிகளும் வெடிபொருட்களும் அரண்மனைக் கிட்டங்கியில் பதுக்கிவைக்கப்பட்டிருந்தன. எத்தனைபடைகள் இருந்தாலும், ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்கள் மிகப்பெரிய சவாலாக இருந்தது. தொடர் வெற்றிகளைக் குவித்துவந்த வேலுநாச்சியார் இறுதிப் போரில் தோற்றுவிட்டால் என்ன ஆவது?

என்னதான் வீரமறவர்கள் வேலுநாச்சியாரின் படையில் இடம் பெற்றிருந்தாலும் ஆங்கிலேயரின் நவீன ஆயுதங்கள் மிகப்பெரிய சவாலாக இருந்தன. விருப்பாச்சியிலிருந்து தொடர் வெற்றிகளைக் குவித்து வந்த வேலுநாச்சியாருக்கு இறுதிப் போரில் தோற்றுவிட்டால் என்ன ஆவது என நினைப்பதற்கே அச்சமாக இருந்தது. இருப்பினும் நம்பிக்கையைக் கைவிடவில்லை.

அப்போது ஒரு மூதாட்டி வேலுநாச்சியாரிடம், "நாளைவிஜயதசமித்திருவிழா. சிவகங்கையில் உள்ள இராசராச ஈசுவரி கோவிலில் பெண்கள் மட்டும் வழிபாட்டிற்காக அழைக்கப்படுவர். இதை நீங்கள் ஏன் பயன்படுத்தக் கூடாது?" என வினவினார். "எங்களிடம் இத்தனை அக்கறையோடு பேசும் நீங்கள் யார்?" எனக் கேட்டார் வேலுநாச்சியார். பதில் கூறாமல் மூதாட்டி நழுவ முற்பட சின்னமருது மிகக் கடுமையாக வாள் முனையில் நிறுத்திக் கேட்டார். அப்போது அம்மூதாட்டி தன்னுடைய வெண்மையான தலைமுடியை விலக்கி ஒப்பனையைக் கலைந்து காட்டினார். அவர் வேறு யாருமில்லை, குயிலிதான்.

சிவகங்கையின் நிலவரம் அறிய மாறுவேடத்தில் சென்று வந்ததாகவும் அனுமதியின்றி சென்றதற்காக மன்னிப்புக் கோருவதாகவும் பணிந்து நின்றார்.

வேலு நாச்சியாருக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. குயிலியைப் பாராட்டியதோடு குயிலியின் தலைமையிலான பெண்கள் படையோடு வேலு நாச்சியாரும் "நாளை மறுநாள் விஜயதசமி. அன்று சிவகங்கைக் கோட்டையில் உள்ள ராஜராஜேஸ்வரி அம்மன் கோயிலில் கொலு வைக்கிறார்கள். இதைப் பார்ப்பதற்காக அன்று ஒருநாள் காலை மட்டும் பெண்களுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதைப் பயன்படுத்தி ராணியாரின் தலைமையில் பெண்கள் படை கோட்டைக்குள் புகுந்துவிடும். பிறகு என்ன? வெற்றி, நமது பக்கம்தான்." என்ற யோசனையைச் சொன்னாள், குயிலி. போர் மூண்டது. அரண்மனைக்கு வெளியிலிருந்து மருது சகோதரர்கள் தாக்குதலைத் தொடங்க உள்ளிருந்து வேலுநாச்சியாரும் குயிலியும் வாட்களைச் சுழற்ற ஆங்கிலத் தளபதி பாஞ்சோர் என்ன நடக்கிறது என்பதை அறிய முடியாமல் விழி பிதுங்கி நின்றான். **- தொடரும்**



# கருணை இல்லத்தில்

## விதிமீறல்கள் கண்டுபிடிப்பு

உத்திரமேரூர் அருகே பாலேஸ்வரம் பகுதியில் செயல்பட்டு வரும் ஆதரவற்றவர்களுக்கான கருணை இல்லத்தில் உள்ள விதிமீறல்கள் தொடர்பாக நோட்டீஸ் அனுப்ப வருவாய்த் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உத்திரமேரூர் அருகே உள்ள பாலேஸ்வரத்தில் ஆதரவற்றவர்களுக்கான கருணை இல்லம் செயல்பட்டு வருகிறது. இங்கு 350 பேர் தங்கியுள்ளனர்; 30-க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்றனர்.

இந்தக் கருணை இல்லத்தில் இறந்தவர்கள் சுவரில் சிறு, சிறு பெட்டிகள் போன்ற பிண வறையில் வைத்து சிமென்ட் பூசி அடக்கம் செய்வதாகக் கூறப்படுகிறது. இது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இறந்தவர்களின் எலும்புகள் வெளிநாடுகளில் விற்பனை செய்யப்படுவதாகவும், அதற்காகத்தான் பெட்டிகள் போன்ற பிணவறையில் வைத்து அடக்கம் செய்வதாகவும் இப்பகுதியைச் சேர்ந்த சிலர் குற்றம் சாட்டுகின்றனர். இதற்கு கருணை இல்ல நிர்வாகத்தினர் மறுப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் இரும்புலியூர் இல்லத்தில் இறந்த விஜயகுமார் என்பவரது சடலம் இந்தக் கருணை இல்லத்துக்கு வேனில் கொண்டு வரப்பட்டது. அப்போது அதே இல்லத்தில் தங்கி இருந்த செல்வராஜ் (72), திருவள்ளூரைச் சேர்ந்த அன்னம்மாள்(74) ஆகியோரையும் அந்த வேனில் அழைத்து வந்தனர். அந்த வேன் திருமுக்கூடல் அருகே வரும்போது அன்னம்மாளின் அலறல் சத்தம் கேட்டு அப்பகுதி மக்கள் வேனை வழிமறித்து போலீஸாரிடம் ஒப்படைத்தனர். மேலும் இந்தக் கருணை இல்லத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தி காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இந்நிலையில் காஞ்சிபுரம் கோட்டாட்சியர் ராஜு உட்பட 6 துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின்போது கருணை இல்லத்தில் பல்வேறு விதிமீறல்கள் இருப்பது தெரியவந்தது. இந்த விதிமீறல்கள் தொடர்பாக சம்பந்தப்பட்ட துறைகள் மூலம் நோட்டீஸ் அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

காவல்துறை சார்பில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதில் கருணை இல்லத்தில் இறப்பவர்கள் குறித்த விவரங்கள் தங்களுக்கு தெரிவிக்கப்படுவதில்லை என்று கூறியுள்ளதாக போலீஸார் சிலர் தெரிவித்தனர்.

அதேபோல் சமூக நலத்துறை சார்பிலும் அங்கு சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மனநலம் பாதிக்கப்பட்டவர்களைக் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனை மூலம் சிகிச்சை அளிக்க வேண்டும். யாராவது உறவினர்கள் இருந்து அவர்கள் வீட்டுக்குச் செல்ல விரும்பினால் அவர்களை அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள் தெரிவித்தனர்.

இந்தக் கருணை இல்லம் தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தோஷ் ஹதிமானியிடம் கேட்டபோது, "வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் ஆய்வு நடந்துள்ளது. அந்த ஆய்வு அறிக்கை எங்களுக்கு வந்த உடன் அந்த அறிக்கையின் அடிப்படையில் நாங்கள் நடவடிக்கை எடுப்போம்" என்றார்.

**- ஞானவேல்**



# அவசர தேவை

2013ம் ஆண்டுக்குப்பின் இப்போது தான் தமிழ்நாட்டில் கலெக்டர் கள் மாநாடு மற்றும் எஸ்பிக்கள் மாநாடு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களின் முக்கிய பிரச்னை,

வளர்ச்சி பணிகள், தேவைகள் குறித்து பேச, முடிவெடுக்க உதவும் இந்த மாநாட்டை நடத்துவதற்கு அதிமுக அரசுக்கு 4 ஆண்டுகள் தேவைப்பட்டிருக்கிறது. இதனால் மாவட்டங் களின் உண்மை நிலை இன்று வரை அரசின் தலைமைப்பதவிகளில் இருப்பவர்களின் கவனத்திற்கு எட்டவில்லை அல்லது சொல லப்படவில்லை. மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் போன்றோர் தமிழகத்தில் பயங்கரவாதிகள் நடமாட்டம் அதிகரித்து இருப்பதாகவும், சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து இருப்பதாகவும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றனர்.

ஒரே நேரத்தில் 150க்கும் மேற்பட்ட ரவுடி கள் ஒன்றுகூட முடிந்ததும் இதனால்தான். சேலத்தில் ரவுடிக்கு போலீஸ் அதிகாரிகள் கேக் ஊட்டுகிறார்கள். மக்களின் காவலனாக இருக்க வேண்டிய அரசும், அதிகாரிகளும் ஆண்டுக்கு ஒரு முறை தங்களை ஆய்வுக்கு உட்படுத்தாததால் அரசின் செயல்பாட்டில் ஒரு மந்தநிலை ஏற்பட்டுள்ளது. இலக்கு நிர்ணயித்து பணிகளை மேற்கொள்ளும் நடைமுறை இல்லாமல் இருக்கிறது.

மார்ச் 5ல் தொடங்கி 3 நாள் நடைபெற இருக்கும் இந்த மாநாட்டில் ஒவ்வொரு மாவட்ட கலெக்டர்கள் மற்றும் எஸ்பிக்கள் தங்கள் மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கு மற்றும் இதர தேவைகள் குறித்து முழு அறிக்கை தாக்கல் செய்வார்கள். அப்போது படித்து முடித்து வரும் இளைஞர்கள் மற்றும் பட்டதாரிகளின் நலனில் அக்கறை கொண்டு வேலைவாய்ப்பை பெருக்குவது குறித்தும், தொழில் வளர்ச்சி குறித்தும் இந்த மாநாட்டில் ஆலோசிக்க வேண்டியது அவசியம்.

ஆண்டு தோறும் பள்ளிக்கல்வித்துறைக்கு தமிழக அரசு ரூ.30 ஆயிரம் கோடி ஒதுக்கு கிறது. அதுபோல் சுகாதார திட்டங்களுக்கும் பல்வேறு கட்ட அளவில் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. இந்த திட்டங்கள் மக்களிடம் எப்படி சென்றடைந்துள்ளன?, அதில் மேற் கொள்ள வேண்டிய முன்னேற்றம் குறித்தும் இந்த மாநாட்டில் ஆய்வு மேற்கொள்வது முக்கியம். இவை எல்லாவற்றையும் விட தமிழகம் முழுவதும் நகர்புறங்களில் எந்தவித கண்காணிப்பும் இல்லாமல் அதிக அளவில் வெளிமாநில தொழிலாளர்கள் வந்து குவிந்துள்ளனர்.

குறிப்பாக சென்னை, திருப்பூர், கோவை, மதுரை, திருச்சி, சேலம் உள்ளிட்ட பெருநகரங் களில் இந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை அதிக அளவில் உள்ளது. இவர்களின் செயல் பாடுகள் என்ன?, கொலை, கொள்ளையில் இவர்களது பங்கு என்ன?, அவர்களின் எண்ணிக்கை பெருகுவதை கட்டுப்படுத்துவது எப்படி?, அவர்களை கண்காணிப்பது எப்படி என்பது பற்றி தமிழக அரசு ஆலோசனை நடத்துவது இன்று அவசர தேவையாக உள் ளது. இதையெல்லாம் கலெக்டர்கள் மற்றும் எஸ்பி மாநாட்டில் ஆய்வு செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

**வீ. சிவசங்கரன்**

# ஆந்திராவைப் பார்த்தாவது திருந்துங்க..!



தடுப்பணைகள் கட்டுவதில் முதலிடம் பிடித்த மாநிலம்? – **குஜராத்**

அணை கட்டுவதில் முதலிடம் பிடித்த மாநிலம் – **கர்நாடகா**

ஆற்று மணல் திருட்டை தடுத்த மாநிலம்? – **கேரளா**

மழைநீர் சேமிப்பு, சொட்டுநீர் பாசனத்தில் முதலிடம் பிடித்த மாநிலம்? – **ராஜஸ்தான்**

மண் பரிசோதனையில் முதலிடம் பிடித்த மாநிலம்? – **மத்திய பிரதேசம்**

கால்நடை வதை தடுப்பு, மாற்று வருவாய் உத்திரவாதம் வழங்குவதில் முதல் இடம்? – **உத்திரபிரதேசம்**

விவசாயிகளுக்கு வறட்சி, பயிர் காப்பீட்டில் முதலிடம்? – **மகாராஷ்ட்ரா**



இயற்கை விவசாயத்திற்கு ஊக்கமளித்து முதலிடம் பிடித்த மாநிலம்? – **சிக்கிம்**

ஆன்லைன் சந்தை மூலம் விவசாயிகளுக்கு அதிக லாபம் கிடைக்க செய்யும் மாநிலம்? – **சட்டீஸ்கர்**

செயற்கை நீர்நிலைகளை உண்டு பண்ணி அதில் விவசாயிகள் மீன் வளர்ப்பதை ஊக்குவிக்கும் மாநிலம்? – **மேற்கு வங்கம்.**

அய்யோ! அய்யய்யோ!!
இதில் எதிலும் என் தமிழ்நாடு இல்லையா?
போராடுவோம் போராடுவோம்
இறுதி வரை போராடுவோம்.!

அய்யா, அவசரப்படாதீங்க

**உங்க தமிழ்நாடும் பல விதத்திலே
முதலிடத்தில இருக்கு. இப்ப
நான் கேள்வி கேக்குறேன்.
நீங்க டாண் டாண்ணு
பதில் சொல்லுவீங்க பாருங்க.**

தன் ஆற்று மணலையே அள்ளி அதை வேறு மாநிலத்திற்கு விற்பதில் முதலிடம் – **தமிழ்நாடு**

வருஷத்துக்கு ஒரு வாட்டி ஏரி, குளம் தூர் வாறினதா கணக்கு காட்டி பணத்தை அபேஸ் பண்ணும் மாநிலம்? – **தமிழ்நாடு**

அரசாங்கம் மக்களுக்கு இலவசமா செய்ய வேண்டிய கல்விச் சேவை, மருத்துவத்தை தனியார் காசாக்குறதுல முதலிடம் – **தமிழ்நாடு**

*அனைத்து அரசு அலுவலகங்களிலும் காசு லஞ்சம் கொடுத்தாதான் வேலை நடக்கும் என்கிற நிலையை 50 வருஷமா கடைபிடிக்கும் மாநிலம்* **– தமிழ்நாடு**

*50 வருஷமா திராவிட கட்சிகள் என்ற பெயரில் உலவும் திருட்டுக் கழகங்கள் எவ்வளவு ஏமாற்றினாலும் சுரணையில்லாம இருப்பதில் முதலிடம்* **– தமிழன், தமிழ்நாடு**

*8000 ரூபாய் சின்டெக்ஸ் டாங்க்குக்கு 10 லட்ச ரூபாய் மதிப்பீடுன்னனு சொன்னாலும் மந்த புத்தியுடன் பேசா மடந்தையாக இருப்பதில் முதலிடம்?* **– தமிழ்நாடு**

*நாட்டின் இயற்கை வளமான தாது மணல், கிரானைட் போன்றவற்றை அனுமதியில்லாமல் திருடி ஏற்றுமதி செய்வதில் முதலிடம்?* **– தமிழ்நாடு**

*கோயில் வேண்டாம், கடவுள் இல் லைன்னு சொன்னவனை தர்மகர்த்தா வாக்கி அழகு பார்ப்பது* **– தமிழ்நாடு**

*உண்டியல் பணத்துக்கு காவலாளியா திருடனை அனுமதிப்பதில் முதலிடம்? – தமிழ்நாடு*

*24 மாசத்துல தாமிரபரணி - கருமேனியாறு நம்பியாறு திட்டத்தை நிறைவேற்றுவோம்னு சொல்லி அதை இணைக்காமல் 608 கோடி ரூபாய் செலவுன்னு சொல்லி மக்கள் பணத்தை கொள்ளை அடித்த அரசியல் வியாதி களை எங்க ஆற்றை இணைச் சிருக்கீங்கன்னு கேக்காதவர்கள் உள்ள மாநிலம்?* **– தமிழ்நாடு**

*என்னதான் பல மருத்துமனைகள் பல மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் இருந்தாலும் நிலவேம்பு குடிநீரை மட்டுமே வச்சி வைத்தியம் பாத்தது எங்க* **– தமிழ்நாடு**

- அது மட்டும் இல்லாம வைகை ஆற்றில் தெர்மா கோல்
- இந்திய தற்போதைய பிரதமர் மன்மோகன் சிங்
- மக்கள் சோப்பு போட்டு குளிப்பதால் ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும் நுரை
- வடக்கிலிருந்து பஸ் ஏறி வரும் டெங்கு கொசு
- கம்பராமாயணம் எழுதியவர் சேக்கிழார்

இப்படி சொல்லிகிட்டே போலாம்க எங்க தமிழ் நாட்டின் பெருமைய

*இதை படிக்கும்போது*
*உண்மையாகவே வெட்கமும்*
*கோபமும் வருகிறது என்றால் நீயும்*
*உண்மையான ஒரு தமிழன்தான்*
*இதை மற்றவரிடமும் பகிரும்போது*
*அவர்களும் அறிந்து கொள்வார்கள்*
*இனி இவர்களை போன்ற*
*தலைவர்களை தேர்ந்தெடுக்க கூடாது*
*என்பதை தெறிந்துகொள்வார்கள்*

**– சத்தியநாராயணமூர்த்தி**





# சிரியாவை கண்டுகொள்ளாத சித்தாந்தங்கள்!

யாருக்காக இந்த போர்..?
பிணங்கள் விழுந்த
தரை மீது படர்கிறது தினம்
சூரியதேவனின் பின் மாலைப்பொழுது
லட்சக்கணக்கான குடும்பங்களின்
இலட்சியத்தைத் தின்று
ஏப்பம்விட்டு நிற்கின்றனர்
அசூர ஏகாதிபத்தியங்கள்..!

ஒருநாள் தீபாவளி சத்தமே
தாங்க முடியலை...
ஓயாத போர் சத்தம்
மனிதாபிமானம் உள்ளவர்களால்
தூங்க முடியலை...

இரத்தவெறி மகுடங்களின்
கோரப்பசியில்....
வண்ணக்கனவுகள் சிதைந்தாச்சு...!
வளங்கள் எல்லாம் இழந்தாச்சு...!
போரால் ஒங்கிய வாழ்வு இருளாச்சு...!

நம்பிக்கை சூனியன்
இனி உதிக்குமா..?

சிரியா மக்களின் சிதறிய வாழ்வு
ஒன்று கூடுமா...?

நாமும் பிரார்த்திப்போம்...
இறைவனின் கருணையால்
இருள் நீங்கி ஒளி பிறக்கட்டும்!

**- கவிஞர் நிவேதிதா**

கதைகளில் வரும் பெயர்களும், நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழ்களில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மை தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுத்தாளர்கள் சொந்தக் கருத்துக்களே. Press & Registration of Book Act-in ன்படி செய்திகள் தேர்வுக்கு ஆசிரியர் மட்டுமே பொறுப்பாவார். எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது.

MAKKAL VISARANAI Owned and Published by A. Mouriyan, from 3, Anna Veethi 1st Street, MGR Nagar, Chennai - 600 078. Printed by : S.Ali Mohammad Syeed, at J.M.Process, 22/49, Subedhar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-14. Editor. **A. MOURIYAN,**

# apple Printers

ஆப்பிள் பிரிண்டர்ஸ்












- ❖ We Create Logos
- ❖ Business Cards
- ❖ ID Cards
- ❖ Magazine
- ❖ Books
- ❖ Graphics Elements

and anything




No. 177/94-95, Soda Compnay Lane, Triplicane, Chennai - 600 005.
Email : appleprintersam@gmail.com / web. www.makkalvisaranai.com

**Cell : 93821 33344, 63819 50149**

MAKKAL VISARANAI Tamil Monthly Regd. No. TN/CC(S) DN/461/16-18
Registered with Registrar of News Paper for India Under No. TNTAM 44870/2012
Posted at EGMORE RMS / 1 Patrika Channel Posted Date of Publication 15th of Every Month

